MAHAANS
PICK & PRESS OIL MILL
*ORGANIC BULK STORE*
(416) 293 4010
kathir@mahaanspickandpressoilmill.com
www.mahaanspickandpressoilmill.com
5-5635 Finch Ave East,
Scarborough Ontario, Canada M1B5K9
ORGANIC - HEALTHY - TASTY


# தேசம்

NATION THE THESAM


ஸ்காபுறோ மற்றும் பிரம்ரன் நகரங்களில்.....
உங்களுக்கு தேவையானது..
சஞ்சிகைகள்
கல்வெட்டுக்கள்
சிறுகதை, கவிதைத் தொகுப்புக்கள்
திருமண அழைப்பிதழ்கள்
சிறிய அளவிலான செய்திப் பத்திரிகைகள்
விளம்பர அறிவித்தல்கள்
விழா மலர்கள்
அரங்கேற்ற மலர்கள்
விபரங்களுக்கு 647 891 7725 அல்லது
647 621 7725 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்



Issue - 29 Once a Month JULY 2026




## ஒன்ராறியோ மாநிலமும் கறுப்பு ஜூலையின் 43ஆம் ஆண்டை நினைவுகூர்கிறது என்கிறார் மாநில இணைஅமைச்சர் விஜய் தணிகாசலம்

## கனடா தினத்தன்று முதியோர்களுக்கு இலவச உணவளித்தும் ஸ்காபுறோ பொது வைத்தியசாலைக்கு 5 இலட்சம் கனடிய டாலர்களையும் அன்பளிப்புச் செய்தும் மகிழ்ச்சியடைந்த வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார்






## 'சக்தி நர்த்தனாலயம்' வழங்கிய 'முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்' நாட்டிய நிகழ்ச்சி பல உணர்வுகளை வெளிக்காட்டியது

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் விஜய் அவர்களை சந்தித்தனர்



# ஒன்ராறியோ மாநிலமும் கறுப்பு ஜுலையின் 43ஆம் ஆண்டை நினைவுகூர்கிறது என்கிறார் மாநில இணைஅமைச்சர் விஜய் தணிகாசலம்

ஒன்ராறியோவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் கறுப்பு ஜுலையின் 43ஆம் ஆண்டு நினைவை இன்று கனத்த இதயத்துடன் நினைவுகூர்கின்றனர்.

1983ஆம் ஆண்டு ஜுலை மாதம், இலங்கை அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியான வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களின்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும், இடம்பெயர்ந்தும் பாதிக்கப்பட்டனர். அத்துடன் தமிழர்களின் வீடுகள், வணிகங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் முற்றிலும் அழித்தொழிக்கப்பட்டன. குடும்பங்கள் பிரிக்கப்பட்டு, முழுச் சமூகங்களும் பேரழிவிற்குள்ளாகியதால், எண்ணற்ற தமிழர்கள் பாதுகாப்புத் தேடித் தமது தாயகத்தைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகினர்.
கறுப்பு ஜுலையின் கொடூரங்களில் இருந்து தப்பிப்பிழைத்த பலர் பின்னர் கனடாவில் தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பினர். இன்று அவர்கள் எமது அயலவர்களாகவும், சமூகத் தலைவர்களாகவும், வணிக உரிமையாளர்களாகவும், பெற்றோர்களாகவும் விளங்குகின்றனர்.
இந்தத் துயரத்தின் வடுவையும், அதை எதிர்கொள்ள நிறைவேற்றப்பட்ட சட்டத்தையும் நினைவுகூர்ந்து அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்:
"கொடூரமான இவ்வினப்படுகொலையால், தமிழர்கள் அளப்பரிய துன்பங்களைச் சுமந்து தமது தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்தனர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்கொடுமைகளை உலகிற்கு எடுத்துரைக்கவும், அவர்களின் பாதிப்புகள் என்றும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 104 நிறைவேற்றப்பட்டது."
இவ்வனுபவங்கள் வெறும் கடந்த காலக் கதைகள் அல்ல் அவை தப்பிப்பிழைத்தவர்களால் சுமக்கப்பட்டு, அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தப்படும் வாழும் நினைவுகளாகும் என்று வலியுறுத்தினார். தமிழ் இன அழிப்பின் வரலாறு ஒன்ராறியோ மாநிலம் முழுவதும் என்றும் நினைவுகூரப்படுவதையும் கற்றுக்கொடுக்கப்படுவதையும் உறுதிசெய்யும் வகையில் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் சட்டம்மூலம் 104 நிறைவேற்றப்பட்டது.
43ஆண்டுகள்கடந்தபின்னரும், சமூகத்தினரும்மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து நினைவஞ்சலி செலுத்தி வருகின்றனர். கல்வியூட்டல், குரல்கொடுத்தல் மற்றும் நினைவுகூருதல் ஆகியவற்றின் மூலம் ஒன்ராறியோ மாநிலம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு உயிரையும் கௌரவிப்பதுடன், தப்பிப்பிழைத்தவர்களின் துயரங்கள் என்றும் மறைக்கப்படாது என்பதை உறுதிசெய்கிறது. என்றும் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



# "கறுப்பு ஜீலை இனப்படுகொலையில் பலியான ஈழத் தமிழ் மக்களுக்குப் பொது நினைவுச்சின்னம் அமைக்கப்பட வேண்டும்"

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை

ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றுப் பேரவலத்தில் ஒன்றான கறுப்பு ஜீலை இனக்கலவரம் அரங்கேறி 43 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இத்தனை ஆண்டுகளைக் கடந்தும் இதுவரையில் 1983 ஜீலையில் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளின் நினைவாக ஒரு முறையான நினைவுச்சின்னம் அமைக்கப்படாமல் இருப்பது பெரும் வரலாற்றுத் தவறு ஆகும். இது இறந்த காலத்தை நினைத்து அழுவதற்கானது அல்ல இது ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்காலப் போராட்டத்தின் ஒரு வடிவமும் ஆகும். அந்த வகையில் 2027 ஜீலைக்கு முன்னதாகவாவது 1983 இனக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களையும் நினைவுகூரும் வகையில் பொது நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

1983 கறுப்பு ஜீலை இனக்கலவரத்தின் நினைவை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் தனது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

1983 ஜீலையில் நிகழ்ந்தது இரு சமூகங்களுக்கிடையே வெடித்த ஒரு சாதாரண கலவரம் அல்ல. அது, அப்போதைய பேரினவாத அரசாங்கத்தின் முழுமையான ஆசீர்வாதத்தோடும், அனுசரணையோடும் அரச இயந்திரங்களையும், வாக்காளர் பட்டியல்களையும் பயன்படுத்தித் தமிழ் மக்களை இனங்கண்டு மிகத் துல்லியமாக நடாத்தப்பட்ட திட்டமிடப்பட்ட ஓர் இனப்படுகொலை ஆகும். கொழும்பில் ஆரம்பித்துத் தென் இலங்கையின் பிறபகுதிகளுக்கும் மலையகத்துக்கும் பரவிய பேரினவாத வெறியாட்டத்தில் வெலிக்கடைச் சிறையில் கைதிகளாக இருந்த 53 பேர் உட்பட 3000 தமிழர்கள் வரையில் படுகொலை செய்யப்பட்டார்கள்.



ஜீலை இனக்கலவரம் தமிழ் மக்களின் உயிர்களை மாத்திரம் பலியெடுக்கவில்லை. அவர்களின் வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. ஈழத்தமிழர்கள் பொருளாதார ரீதியாகத் தற்சார்பு அடைந்து விடக்கூடாது என்பதற்காகத் தமிழர்களின் பல தசாப்தகாலப் பொருளாதாரக் கட்டமைப்புகள் ஒரே வாரத்துக்குள் முற்றாகச் சிதைக்கப்பட்டன. தமிழ் மக்கள் வெறும் கையினர்களாக அங்கிருந்து கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். இந்த வரலாற்றுத் துயரங்களை மறப்போம் மன்னிப்போம் என்று கூறிவிட்டு நாம் கடந்து செல்ல முடியாது.

எமது நெஞ்சில் ஆறாத வடுவாக இருக்கும் இந்த வரலாற்றுப் பேரவலத்தின் பின்னனியையும், அதன் மூலம் தமிழ் இனம் கற்றுக்கொண்ட அரசியல் பாடங்களையும் எமது அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவது முதன்மையான தேசியக் கடமையாகும். இந்த வரலாற்றுக் கடத்துகைக்கு நினைவேந்தல்களும், நினைவுச் சின்னங்களும் அவசியமானவை ஆகும். எனவே, கறுப்பு ஜீலையில் எமது இனம் இழந்த உயிர்களின் சாட்சியாகவும், எமது தேசிய விடுதலைப் பயணத்தின் வழிகாட்டியாகவும் பொருத்தமானதொரு இடத்தில் 1983 கறுப்பு ஜீலை நினைவுச்சின்னம் நிறுவப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.




## தேசக்குரல்- யூலை-2026

Thesam Publishers
தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# யூலைப் படுகொலைகளின் கோரமான நினைவலைகள் ஆயுள் உள்ளவரை எம் மனங்களில் அமைதியைநிலைகொள்ள வைக்காது!

“யூலைப் படுகொலைகள்’ இடம் பெற்ற காலம் 1983ம் ஆண்டு யூலை மாதத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் அல்ல. இரண்டு வார காலம் வரை அந்த ‘கொரூயஅிரம்’ இலங்கையின் அனைத்துப்பகுதிகளிலும் ‘அரங்கேற்றப்பட்டன’. அரச பயங்கரவாதிகளான இலங்கையின் இனவாத ஆட்சியில் இருந்த ஜனாதிபதியும் பிரதமர் மற்றும் அமைச்சர்களும் காடையர்களும் காவல்துறையினரும் இணைந்து நடத்திய அந்த இரத்தம் தோய்ந்த காலப்பகுதியில் இனம் சார்ந்து நடத்தப்பட்ட அந்த படுகொலைகள் நன்கு திட்டமிட்டு நடத்தப்பெற்றன என்பதை உலகமே அறிநிதிருந்தது. இலங்கையில் மாறி மாறி ஆட்சிக் கதிரையில் அமர்ந் முதலாளித்துவக் கட்சிகள் தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் தொடர்ச்சியாக இழைத்து வந்த கொடுமைகள் மற்றும் அடக்கு முறைகள் எம் இளைஞர்களையும் மாணவர்களையும் சிந்தித்து நடக்க வேண்டிய காரணத்தாலும் சோதனை என்ற பெயரில் அரசாங்கத்தின் இனவாதப் படைகள் நடத்திய அராஜகங்களும் அடக்குமுறைகளும் இலங்கை அரசுக்கு எதிராக‘கொரில்லா’ யுத்த முறை சார்ந்த தாக்குதல்களை நடத்த திட்டங்கள் தீட்டுவதும் அவற்றை சந்தர்ப்பம் சரியாக அமைந்தால் எதிரியை அழிக்கும் முயற்சியில் உடனடியாக இறங்கலாம் என்ற என்ற கருத்துக்களின் அடிப்படையில் அப்போது தமி9ழ் இளைஞர் விடுதலை அமைப்புக்கள் போராடங்களை நடத்த தயாராகின.

இவ்வாறான நிலையில் நாம் தற்போது இந்த விடயத்தில் உடனடி நடிவடிக்கைகளை எடுப்பது மிகவும் அவசர விடயமாக இருந்த நிலையில் உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் உலகெங்கும் சுகபோகங்களை அனுபவிக்கும் அந்தந்த தேசங்களை ஆளும் அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்ற வகையில் நாட்டின் வளங்களைச் சுரண்டி தங்களை வளர்த்துக் கொளள முயலும் வேளையில் ஏமாற்றம் தரும் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.

அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.
இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்' விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப்படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக ‘தமிழ் மாணவர் பேரவை’ போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத்தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள ‘ஆயுதப் போராட்டம்’ ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.
இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டுதலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்னும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்படுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்.!

# BECOMING: A JOURNEY TO WHOLENESS'' A Dance Eveming presented by 'Shakti Narthanalayam-Toronto

# 'சக்தி நர்த்தனாலயம்' வழங்கிய 'முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்' நாட்டிய நிகழ்ச்சி பல உணர்வுகளை வெளிக்காட்டியது

□□ரீமதி ஜனனி ரவிசங்கரின் 'சக்தி நர்த்தனாலயம்' வழங்கிய 'முழுமையை அடைவதற்கான ஒரு பயணம்' நாட்டிய நிகழ்ச்சி க டந்த 12-07-2026 ஞாயிற்றுக்கிழமை 'யோர்க்வுட் நூலக கலையரங்கில் நடைபெற்றபொது மண்டபம் நிறைந்த நடன ஆர்வலர்கள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் பல உணர்வுகளை வெளிக்காட்டியது மட்டுமன்றி அவசியமான ஒரு நோக்கத்திற்கான ஒரு மேடை என்பதை வெற்றிகரமாக காட்டியது என்றும் கூறலாம்.

அன்றைய நிகழ்வுகளை திருமதி வான்ஜிதா சுஜந்தன் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.









ரீமதி ஜனனி ரவிசங்கரின் 'சக்தி நர்த்தனாலயம்' நடனப் பள்ளியின் சிரேஸ்ட மாணவியான செல்வி மிசெல் நிருஷியா கொட்வின் பிரதான நடனத் தாரகையாக விளங்க அன்றைய தினம் நடனப் பள்ளியின் அடுத்த நிலை மாணவிகளும் பங்கெடுத்த இந்த நடன மேடையும் முழுதான நடன நிகழ்ச்சியும் குருவின் திறமையையும் பிரதான நடனத் தாரகையின் பயிற்சியின் அர்ப்பணிப்பையும் ஏனைய நடனச் செல்விகளின் அபாரமான நடனப் பயிற்சியையும் குருவின் வழிகாட்டலை பின்பற்றிய நேர்த்தியையும் எடுத்துக் காட்டின என்றால் மிகையாகாது









நடன நிகழ்வின் பிரதம விருந்தினராக நடன ஆசிரியை அற்புதராணி கிருபைராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் விசேட விருந்தினராக அர்த்தமி சிவா குருவிந் அவர்களும் கலந்து சிறப்பித்து அன்றை நடன நிகழ்வின் நோக்கம் மற்றும் குருவின் திறமை மற்றும் ஆழமான பார்வை அத்துடன் பிரதான நடனத் தாரகை செல்வி மிசெல் நிருஷியா கொட்வினின் அர்ப்பணிப்பு மற்றும் நல்லதொரு நோக்கத்தோடு சிறந்த ஒரு கருப்பொருளை தனது பிரதன நடனத்தில் இணைத்துக் கொண்டமை போன்ற பல விடயங்களை உள்ளடக்கி தங்கள் வாழ்த்துரைகளை வழங்கியும் பாராட்டியும் அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியும் மகிழ்ச்சியோடு விடைபெற்றனர்.

மண்டபத்தை நிறைத்து அன்றைய நடன மேடையை பெருமைப் படுத்திய அனைவருக்கும் 'சக்தி நர்த்தனாலயம் நிறுவன அதிபர் ஜனனி ரவிசங்கர் மற்றும் செல்வி மிசெல் நிருஷியா கொட்வினின் பெற்றோர் மற்றும் நண்பர்கள் அனைவரும் தங்கள் நன்றியை தெரிவித்தனர்.









# கனடா-கல்முனை பிராந்திய இணையத்தின் கோடை கால ஒன்றுகூடல் , சமூக உறவை வலுப்படுத்தும் நிகழ்வாக இடம்பெற்றது

கனடாவில் இயங்கிவரும் -கல்முனை பிராந்திய இணையத்தின் கோடை கால ஒன்றுகூடல் , சமூக உறவை வலுப்படுத்தும் நிகழ்வாக இடம்பெற்றது என்றால் அது மிகையாகாது.

கடந்த 11-07-2026 அன்று சனிக்கிழமை மார்க்கம் மற்றும் ஸ்காபுறோ ஆகிய நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ள மெலிகன் (ஆடைடமைநபெ) பூங்காவில் நடைபெற்ற மேற்படி கல்முனை பிராந்திய இணையத்தின் மாபெரும் ஒன்றுகூடலில் பெருமளவு மக்கள் கலந்து அன்றைய பொழுதை இனிதாகவும் நட்புறவை வலுப்படுத்தும் நிகழ்வாகவும் நடத்திய அமைப்பினரை அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

இந்நிகழ்வு, இணையத்தின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையிலும், தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. நோ. விஜயரட்ணம் அவர்களின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்றது. நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்காக இணையத்தின் உறுப்பினர்கள் பலரும் இணைந்து பணியாற்றினர்.







எண்ணூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இவ்விழாவில், கல்முனை பிராந்திய மக்களுடன் இணைந்து பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் உறவுகளும் பங்கேற்றனர். அத்துடன் நண்பர்கள் பலரும்ய அங்கு கலந்து கொண்டு சமூக ஒற்றுமை மற்றும் உறவுப் பிணைப்பை வெளிப்படுத்தும் வகையில் மேற்படி ஒன்றுகூடல் அமைந்திருந்தது.

காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் தமிழ் கலை மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், பொழுதுபோக்கு அம்சங்கள், காலை மற்றும் மதிய உணவு உள்ளிட்ட விருந்துபசாரங்கள் உட்பட அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன.










சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலரும் இதில் பங்கேற்றனர்.இந்நிகழ்வின்மற்றுமொருசிறப்பம்சமாக, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் உற்சாகமான சூழலில் நடைபெற்றதுடன், வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்வின் தொடக்கத்தில் கனேடிய தேசிய கீதம் இசைக்கப்பட்டு, மரியாதையுடன் அனைவரும் ஒன்றிணைந்து பாடினர். அதனைத் தொடர்ந்து, கனடா நாட்டின் தேசியக் கொடியை வல்லிபுரம் பரமானந்தராஜா அவர்கள் ஏற்றிவைத்தார். கல்முனை பிராந்திய இணையத்தின் கொடியை வைரமுத்து அனந்தலிங்கம் அவர்கள் ஏற்றிவைத்தார். இந்நிகழ்வில் நந்தகுமார் அவர்கள், இணையத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்களில் ஒருவரான ஸ்ரீ அவர்கள், மன்றத்தின் செயலாளர் திரு. பத்மநாதன், திரு. கோபி, திரு. கிஷாந்த் மற்றும் பலர் எமது மன்ற உறுப்பினர்களும் இணைந்து கலந்து கொண்டு, கொடியேற்ற நிகழ்வை சிறப்பித்தனர். இந்த கண்ணியமான நிகழ்வு விழாவிற்கு மேலும் சிறப்பையும் பிராந்திய உணர்வையும் சமூக ஒற்றுமையையும் இணைக்கும் இடமாக விளங்கியது

இந்நிகழ்வின் போது, எதிர்காலத்தில் தமிழ் சமூக கலாச்சார மண்டபம் அமைக்கும் நோக்கத்திற்காக கூ10,000 நிதியுதவியை தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள், தமிழ்ச் சமூக மையத்தின் இயக்குனர்களில் ஒருவரான ரமணன் அவர்களிடம் அங்கத்தவர்கள் பல இணைந்து நிற்க உத்தியோகபூர்வமாக கையளித்தார். இந்த நிதி சமூக உறுப்பினர்களின் பங்களிப்பால் திரட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு பங்களித்த தலைவர், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தன்னார்வத் தொண்டர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் இணையத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.









# சிங்களத்தின் வெறியாட்டமும் தமிழினத்தின் ஆறாத வடுக்களும்!

கே.பாலா

"1983 ஜூலை 23 முதல் ஜூலை 30 ஆம் திகதி வரை தமிழர்களுக்கு நடந்த கொடூரங்களை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகின்றது "கறுப்பு ஜூலைக் கலவரம்" என்ற தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக,தீராத வலியாக இன்றும் கனன்று கொண்டிருக்கின்றது. இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 43வருடங்கள் கடந்துவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழர் மனங்கள் வேதனையால் வெம்பி வெடிக்கின்றன" தமிழர்களை உயிரோடு எரித்துக் கொன்று சிங்களக் காடையர்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள் கொழும்பிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன.தலைநகர் எங்கும் தீச் சுவாலைகளின் புகை மண்டலம். சிங்களக் கடைகளில் "தமிழனின் கறி கிடைக்கும்" எனப் பலகையில் எழுதி வைத்து சிங்களக் காடையர்கள் எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்கள் உயிர்களைப் பாதுகாக்க பாடசாலைகள், ஆலயங்களை நோக்கி தஞ்சம் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழர்கள் கொழும்பிலுள்ள தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ,உயிருடன் இருக்கின்றார்களோ இல்லையோ எனத் தெரியாது கதறிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் 1983 ஜூலை என்பது வெறும் நாட்காட்டியின் ஒரு பக்கம் அல்ல. அது ஒரு தேசத்தின் ஆன்மாவில் எழுதப்பட்ட ஆறாத வடு. கொழும்பு வீதிகளில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலை, வெறும் உயிர்களையும் உடைமைகளையும் மட்டும் காவு வாங்கவில்லை. மாறாக, 'இலங்கையர்' என்ற பொது அடையாளத்தின் கீழ் தமிழர்கள் கொண்டிருந்த கடைசி நம்பிக்கையையும் சேர்த்து எரித்து சாம்பலாக்கியது.

43 வருடங்களுக்கு முன்னர் இதே நாள் இலங்கையின் தலைநகர் கொழும்பை தமிழர்களின் மரண ஓலங்கள்,உயிர்ப்பிச்சை கேட்கும் கதறல்கள்,தமது மானத்தை காப்பதற்கான தமிழ் பெண்களின் அலறல்கள் அதிர வைத்துக்கொண்டிருக்கின்றன. வாகனங்களில் சென்ற தமிழர்கள் வழிமறித்து உயிரோடு எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் ,வாக்காளர் பட்டியலை வைத்துத் தமிழர்களை அடையாளம் கண்டு வீடுகளிலிருந்து இழுத்தெடுத்து வெட்டித் துண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள் ,குழந்தைகள் கதறக் கதற தலைகீழாகத் தூக்கி நிலத்தில் அடித்துக் கொல்லப்படுகின்றார்கள். பெற்றோருக்கு முன்பாக மகள்களும் கணவர்களுக்கு முன்பாக மனைவிகளும் சகோதரர்களுக்கு முன்பாக சகோதரிகளும் சிங்களக் காடைக் கும்பல்களினால் நிர்வாணமாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு ,வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



தமிழர்களை உயிரோடு எரித்துக் கொன்று சிங்களக் காடையர்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்கள் கொழும்பிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. தலைநகர் எங்கும் தீச் சுவாலைகளின் புகை மண்டலம். சிங்களக் கடைகளில் "தமிழனின் கறி கிடைக்கும்" எனப் பலகையில் எழுதி வைத்து சிங்களக் காடையர்கள் எக்காளமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்கள் உயிர்களைப் பாதுகாக்க பாடசாலைகள், ஆலயங்களை நோக்கி தஞ்சம் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழர்கள் கொழும்பிலுள்ள தமது உறவுகளுக்கு என்ன நடந்ததோ,உயிருடன் இருக்கின்றார்களோ இல்லையோ எனத் தெரியாது கதறிக் கொண்டிருக்கின்றனர்.

தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்துக்கொண்டிருந்த நிலையில் இன்னொரு குரூரமும் ஜூலை 25ஆம் திகதி நடந்தேறியது. கொழும்பின் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளான ரெலோ இயக்கத் தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை, ஜெகன், உட்பட 37 பேரை வெலிக்கடை சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு அவர்கள் அளித்த ஆயுதங்களோடு அங்கிருந்த சிங்களகைதிகள் மிகக் கொடூரமாக படுகொலைசெய்தனர் .நான் மரணித்தால் எனது கண்களை ஒரு தமிழனுக்கு கொடுங்கள் அதன் மூலம் நான் தமிழீழத்தை பார்க்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கூறிய குட்டிமணியின் கண்கள் பிடுங்கி எறியப்பட்டன. அந்த நாளோடு மட்டும் அந்தக் கொடூரம் முடியவில்லை. மீண்டும் ஜூலை 28ஆம் திகதியும் வெலிக்கடை சிறையில் தமிழினப்படுகொலை நடத்தப்பட்டது .18 தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறாக வெலிக் கடை சிறையில் 55 தமிழ் கைதிகள் சிங்கள இனவெறிக்கு இரையானர்கள்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதன் எதிரொலியாக தலைநகர் கொழும்பில் வாழ்ந்த தமிழர்களுக்கு எதிராக இந்த தமிழினப்படுகொலை ஜே .ஆர்.ஜெயவர்த்தன அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டது. 13 சிங்கள இராணுவத்தினரின் உயிர்களுக்காக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்டந்துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பம்,குடும்பமாக தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். 500 க்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் ஈவிரக்கமின்றி இந்த வெறியர்களால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000 க்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து சூறையாடினார்கள். தீக்கிரையாக்கினார்கள் .தப்பிய தமிழர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு உங்கள் நாட்டுக்கு ஓடுங்கள் என வடக்கிற்கு விரட்டப்பட்டார்கள்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவமே தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையை தோற்றுவித்ததாக கூறப்பட்டாலும் ஜே .ஆர்.ஜெயவர்த்தன அரசினால் இந்த இனப்படுகொலை திருநெல்வேலி தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னரே நன்கு திட்டமிடப்பட்டிருந்தது. திருநெல்வேலித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்திலேயே அவர்கள் உடல்களை அடக்கம் செய்ய இராணுவத்தினர் விரும்பிய போதும், அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனே அவர்களது உடலை கொழும்பில் சிங்கள மக்கள் மத்தியில் பார்வைக்கு வைத்து அடக்கம் செய்ய முடிவெடுத்தார். ஜெயவர்த்தனா அரசு இராணுவத்தினரின் மரணத்தை தமிழருக்கு எதிரான இனவெறி தூண்டும் நிகழ்வாக மாற்றியது.

எந்த இராணுவ வீரர்கள் மறைவிற்கும் கடைப்பிடிக்காத புதிய முறைகளில் இந்த இராணுவத்தினருக்கு இறுதி ஊர்வலம் நடந்தது. சவப்பெட்டியில் எடுத்து வராமல் வேண்டுமென்றே சூழ்ச்சியுடன் பொலித்தீன் பைகளில் இராணுவத்தினரின் உடல்களை கட்டிக் கொண்டு வந்தார்கள். இருட்டும் வரை இறுதி ஊர்வலத்தை தாமதப்படுத்தி சிங்களவர்களிடம் கொதிப்புணர்வை தூண்டச் செய்தார்கள். இந்த தாமதம் பெரும்பாலான சிங்களவர்களை கொழும்பை நோக்கி வரச் செய்வதற்கு போதுமான காலமாக இருந்தது. அரச பயங்கரவாதிகளின் குரூரப் புத்தியால் தூண்டப்பட்ட சிங்கள வெறியர்களால் அப்பாவித் தமிழர்களின் இரத்தம் கொழும்பு வீதியெங்கும் அன்று ஆறாக ஓடியது.

இவ்வாறாக இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மலையகத்தின் சில பகுதிகளிலும் 1983 ஜூலையில் நடந்த கொடூரங்கள் வெறும் கலவரம் அன்று. அது உள்நாட்டுப் போரின் தொடக்கம். தமிழர் என்ற அடையாளமே சிங்கள வெறியர்களுக்கு வெறியேற்றிய நாள். சிங்களம் -தமிழ் என்ற இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ்வதில் ஏற்பட்டுவிட்ட முடிவு. 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு சிங்களப் பேரினவாத அரசாலும், சிங்கள இனவெறியர்களாலும் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இந்தக் கொடூரங்கள் அரங்கேற்றப்பட்டு.தற்போது 43 வருடங்கள்.நிறைவடைந்துள்ளன.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, அமைச்சர்களான சிறில் மத்யு, காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி என, அனைவரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் 1983 "கறுப்பு ஜூலை" இன அழிப்பை பல வகைகளில் நியாயப்படுத்தினர் அதற்காக வருத்தப்படவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் தரவோ முயலக்கூட இல்லை. இந்த தமிழினப்படு கொலையின் பின்னர் ஜே .ஆர்.ஜெயவர்த்தன பிரிட்டன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் சிங்களத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தியது.

அந்த நேர்காணலில் "இப்போது யாழ்ப்பாணத்தவர்களின் எத்தகைய அபிப்பிராயத்தைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. அவர்களைப் பற்றி இப்போது நாங்கள் சிந்திக்க முடியாது. அவர்களின் உயிர்களைப் பற்றியும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் எங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவலையில்லை. தமிழர்களைப் பட்டினி போட்டால், சிங்களவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்" என ஜே .ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி இந்த தமிழினப்படுகொலையை வெளிநாடுகள் சில கண்டித்தபோது "எங்கள் வேலை எங்களுக்குத் தெரியும்" என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார். அத்துடன் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற சூளுரையும் ஜெயவர்த்தனவால் விடுக்கப்பட்டது.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது பொலிஸாரும் படையினரும் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை என டைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை, அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நேர்காணல் ஒன்றின்போது வினவியது.'படையினரிடம் பெரிய அளவில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு ஏற்பட்டிருந்தது என நான் நினைக்கிறேன். கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினால், அது சிங்களவர்களுக்கு எதிரான நடவடிக்கையாகப் போய்விடும் என்று படையினர் உணர்ந்திருந்தார்கள். உண்மையிலேயே சில இடங்களில் அவர்கள் கலகக்காரர் களை ஊக்குவித்திருந்ததை நாங்கள் கண்டோம்' என ஜெயவர்த்தன பதிலளித்திருந்தார்.




1983 ஜூலை 23 முதல் ஜூலை 30 ஆம் திகதி வரை தமிழர்களுக்கு நடந்த கொடூரங்களை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகின்றது "கறுப்பு ஜூலைக் கலவரம்" எனப்படும் தமிழினப்படுகொலை இலங்கைத் தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணமாக,தீராத வலியாக இன்றும் கனன்று கொண்டிருக்கின்றது. இந்த ஜூலைக் கலவரம் நடந்தேறி 43வருடங்கள் கடந்துவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் வரும்போதும் ஜூலை என்றதுமே தமிழர் மனங்கள் வேதனையால் வெம்பி வெடிக்கின்றன.

இந்த 1983 ஜூலைக்கலவரம் என்ற பெயரில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட தமிழினப்படுகொலையே பல வரலாறுகளை எழுதியது. பல வரலாறுகளை மாற்றியது. தமிழர்கள், பெரும்பான்மையினமான சிங்களவர்கள் மேல் சிங்கள ஆட்சியாளர்கள் மேல் நம்பிக்கையிழக்க காரணமாக அமைந்தது.. இந்த நாட்டிலே சிங்களவர்-தமிழர்கள் ஒன்றாக இணைந்து வாழ முடியாது என்ற நிலைமையை ஜூலைக் கலவரமே ஏற்படுத்தியது. காலச்சக்கரம் 43 ஆண்டுகளைக் கடந்து ஓடிவிட்டாலும், 1983 ஜூலையில் கொழும்பு வீதிகளில் ஓடிய தமிழர்களின் இரத்தம் இன்னும் காயாமல் அப்படியேதான் இருக்கின்றது . அன்று கொழும்பில் பற்றி எரிந்த தீயின் புகை, இன்றும் இலங்கையின் ஆட்சி பீடத்தின் மீதும், அரசியல் நகர்வுகளின் மீதும் படிந்தே காணப்படுகிறது. ஆட்சியாளர்கள் மாறினாலும் தமிழர்கள் மீதான அவர்களின் அணுகுமுறையும், தமிழர்களுக்கு அவர்கள் மீதிருக்கும் அவநம்பிக்கையும் மாறாமல் தொடர்வதற்குக் காரணம், அன்று விதைக்கப்பட்ட இனவாத நச்சு விதைதான்.

சமத்துவமும், நீதியும், கடந்த காலத் தவறுகளுக்கான உண்மையான பிராயச்சித்தமும் இல்லாதவரை, இரு தேசிய இனங்களுக்கு இடையே உண்மையான நல்லிணக்கம் என்பது வெறும் காகிதக் கனவாகவே இருக்கும்.துப்பாக்கிக் குண்டுகளை விடவும், திட்டமிட்ட ஒடுக்குமுறைகளும், சக மனிதனின் மீதான நம்பிக்கையிழப்புமே ஒரு தேசத்தை நிரந்தரமாகப் பிளவுபடுத்துகின்றன . அந்தப் பிளவின் நிழலில்தான் இலங்கைத் தீவின் இன்றைய ஆட்சியும், அதன் எதிர்காலமும் நகர்ந்து கொண்டிருக்கின்றன

# முள்ளியவளையில் நெற்கொள்வனவு ஆரம்பமாகிய பணிகளை நேரில் சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட எம்.பி ரவிகரன்!

விவசாயிகளிடமிருந்து உடனடியாக சிறுபோக நெற்கொள்வனவை ஆரம்பிக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 08.07.2026அன்று பாராளுமன்றக்க குழு அறையில் இடம்பெற்ற கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தியதுடன், கடந்த 13.07.2026 ஆம் திகதியன்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடக்கு மாகாண பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரனிடமும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது தொடர் வலியுறுத்தலையடுத்து 15.07.2026ஆம் திகதியிலிருந்து முள்ளியவளை கமநல சேவைநிலையத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இவ்வாறு நெல்சந்தைப்படுத்தல் சபையினால் முள்ளியவளையில் நெற்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில்,



அங்கு 16.07.2026இன்று நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நெற்கொள்வனவு தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டதுடன் நிலமைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.



# கழிவு அகற்றும் உழவு இயந்திர பெட்டியில் பாதையாத்திரைகளுக்கான உணவு பொருட்கள் எடுத்துச் சென்ற மட்டக்களப்பு மாநகர சபை!

கதிர்காமம் நோக்கிய புனித பாதை யாத்திரை மேற்கொண்டு காட்டுப்பகுதிகளின் ஊடாகச் செல்பவர்களுக்கு மட்டக்களப்பு மாநகரசபையின் குப்பை கூழங்களை அகற்றுகின்ற உழவு இயந்திர பெட்டியில் உணவு பொருட்களை எடுத்துச் சென்று உணவு சமைத்து கொடுத்துள்ளமை இந்து மக்களையும் மதத்தையும் அவமதிப்பதான ஒரு மிக மோசமான செயல் என ஈ.பி.டி.பி மட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாலைமீன் மடுவில் உள்ள அவரது காரியாலயத்தில் 15ம்திகதி செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் மிக மோசமான செயல் ஒன்று நடைபெற்றுள்ளது மாநகரசபையின் கழிவு அகற்றும் உழவு இயந்திர பெட்டியில் கதிர்காமத்துக்கு செல்லும் பாதை யாத்திரை களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான உணவு பொருட்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் ஏற்றி உகந்தைக்கு எடுத்துச் சென்று உணவு சமைத்து கொடுத்துள்ளனர்.

இந்த செயல் புனித யாத்திரை செய்யும் இந்து மக்களை இழிவுபடுத்தும் செயலாக கருதுகின்றோம் இதை வன்மையாக கண்டிக்கின்றோம். சுகாதாரத்தை போதிக்கின்றார்கள் சுகாதார பரிசோதகர்கள் எத்தனையே உணவகங்களுக்கு அனுப்பி சுத்தமாக சுகாதார முறையில் உணவகங்கள் இல்லை என தெரிவித்து அந்த கடைகளுக்கு சீல் வைக்கின்ற அவர்களே இன்று குப்பை கூழங்களை அகற்றுகின்ற உழவு இயந்திர பெட்டியில் உணவு பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர்

இது ஒரு மிக மோசமான செயல் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வன்மையாக ஈ.பி.டி.பி கட்சி கண்டிக்கின்றதுடன் எதிர்காலத்தில் இவ்வாறு செயல்பட கூடாது.

அதேவேளை மாநகர சபை ஆட்சியை கைப்பற்றிய தமிழரசு கட்சி ஒரு வருடத்துக்கு மேல் ஆகும் நிலையில் நகரிலுள்ள காந்தி பூங்கா கந்தையா பூங்கா உட்பட உள்ள அனைத்து பூங்காக்களில் குப்பை கூழங்கள் அகற்றாமல் காணப்படுவதுடன் வடிகான்கள் குப்பைகள் நிறைந்துள்ளதுடன் வீதிகளில் குவிந்து கிடக்கும் திண்ம கழிவுகளை அகற்றப்படாததால் துர்நாற்றம் வீசுவதால் வீதிகளால் மக்கள் பிரயாணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது



எனவே அத்தியாவசிய தேவையான இந்த திண்மக் கழிவுகளை அகற்ற உங்களால் முடியாமல் விட்டால் உங்களுக்கு அந்த ஆளுமை இல்லாவிட்டால் நீங்களாகவே விலகிச் சென்று படித்த பட்டதாரிகளுக்கு உங்களுடைய இடங்களை கொடுத்தால் அவர்கள் ஆளுமையோடு இந்த மட்டு மாநகர சபையின் கீழ் உள்ள பிரதேசங்களை சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பார்கள்

ஆகவே காலம் காலமாக மாகரசபையை தமிழரசு கட்சி கைப்பற்றி எந்த விதமான அபிவிருத்தி திட்டங்களும் செய்வதும் இல்லை முறையின்படி திண்ம கழிவுகளை அகற்றுவதும் இல்லை. இன்று எத்தனையோ வீதிகளால் மனிதர்கள் செல்ல முடியாது உள்ளது துர்நாற்றம் வீசுகிறது எனவே ஆளுமை அற்ற தலைவர்கள் இருப்பது தமிழ் மக்களுக்கு எந்த பயனும் இல்லை என்பதுடன் இவ்வாறு மக்களின் வரிப்பணத்தை வீணடித்துக் கொண்டு நேரத்தையும் காலத்தையும் கடத்திக் கொண்டு இருக்காமல் ஆளுமை மிக்கவர்களிடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் இராஜனமா செய்வது மேலானது என்றார்.



# “ ஊழல் வழக்குகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்.”

எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் விரைவில் சிறை செல்வார்கள் என்றும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன அதிரடி

“எதிர்க்கட்சியின் பல உறுப்பினர்கள் தற்போது பிணையில் வெளியே இருக்கின்றார்கள். அவர்கள் வெகுவிரைவில் சிறைக்குச் செல்வார்கள். இவ்வாறான நிலையில், இன்னும் எத்தனை பேர் தற்கொலை செய்துகொள்ளப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.”

- இவ்வாறு விவசாயத்துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“சர்ச்சைக்குரிய வழக்குகள் மற்றும் ஊழல், மோசடிகளுடன் தொடர்புடைய சாட்சிகள் மர்மமான முறையில் உயிரிழந்து வருகின்றமை கவலைக்குரியது. ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் கபில சந்திரசேன, எயார் பஸ் கொள்வனவு மோசடி தொடர்பில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சத்தியக்கடதாசி ஒன்றின் ஊடாகப் பல தகவல்களை வெளியிட்டிருந்தார். அவர், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தங்காலை கால்டன் இல்லத்தில் வைத்து இலஞ்சம் வழங்கியதாகத் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். தற்போது முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். இது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலப் படுகொலைகள் மற்றும் ஊழல், மோசடிகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெறுவதால், அதனுடன் தொடர்புடைய பலர் பெரும் அச்சமடைந்துள்ளனர். ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான அனைத்து வழக்குகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான வழக்குகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே, ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்.” - என்றார்.



# மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தற்போதைய அரசை வீழ்த்துவோம் என்ற இலக்கோடு தேர்தல்களில் ஒன்றிணைந்துகொள்வார்கள்

## சஜித் பிரேமதாச அணி நம்பிக்கை தெரிவிப்பு

“மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தற்போதைய மக்கள் விரோத அரசை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குக்காகக் கொண்டு, எதிர்காலத் தேர்தல்களில் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படும் என்பதில் நாட்டம் கொண்டவர்களாக உள்ளார்கள். அவர்களது இணைவில் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது தங்களின் உரிமைகளுக்காகவும் கோரிக்கைகளுக்காகவும் தனியாக ஒழுங்கமைவதில் தவறில்லை. அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் எமது ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்துதான் பயணிக்கின்றனர். இந்த வகையில் தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய சிறுபான்மைக் கட்சிகள், தமது உரிமைகளுக்காகத் தனியானதொரு புதிய கூட்டணியை உருவாக்குவதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களின் உரிமைகளுக்காகவும் கோரிக்கைகளுக்காகவும் தனியாக ஒழுங்கமைவதில் தவறில்லை. அவர்கள் அனைவரும் தொடர்ந்தும் எமது ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணைந்துதான் பயணிக்கின்றனர். அவர்களுக்கு. தற்போதைய மக்கள் விரோத அரசை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்குக்காக, எதிர்காலத் தேர்தல்களில் அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து செயற்படும் என்பதில் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது.” - என்றார்.

இதன்போது நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் அரசின் நிர்வாகக் குறைபாடுகள் குறித்தும் அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் ஆதிக்கம் தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர், அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் அரசின் நிர்வாகச் சீர்குலைவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

“சிறைக்குள் வன்முறை வெடித்தபோது, உரிய நேரத்தில் பொலிஸாரின் உதவியைப் பெறவோ அல்லது முறையான முடிவுகளை எடுக்கவோ சிறைச்சாலை நிர்வாகத்துக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. இக்கட்டான சூழலில் நீதி அமைச்சரைத் தொடர்புகொள்ள அதிகாரிகள் பல மணிநேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவே இந்த அரசின் நிர்வாகக் கட்டமைப்பு சிதைந்துள்ளதற்கான சான்று.” - என்று அவர் சாடினார்.

அரசின் தற்போதைய நிலைப்பாடு குறித்துப் பேசிய திஸ்ஸ அத்தநாயக்க, ஒன்பது ஆண்டுகளாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

“முகநூலில் பகிரப்படும் கருத்துக்களைத் தாண்டி, அரசுக்கு உண்மையிலேயே மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை நிரூபிக்கும் களமாக மாகாண சபைத் தேர்தல் அமையும். ஆளுநர்கள் மற்றும் அதிகாரிகள் மூலம் பிராந்தியங்களை நிர்வகிப்பது அரசமைப்பை மீறும் செயலாகும். ஜனாதிபதிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இருக்குமாயின், தேர்தலை நடத்தி அதனை நிரூபித்துக் காட்டட்டும்.” - என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.



# நூற்றாண்டு காலக் கல்விப் பாரம்பரியமும் ஒரு நூற்றாண்டு கால அரசியலும்.

சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் சுமந்திரனுக்கு காட்டப்பட்ட எதிர்ப்பானது அவர் பழைய மாணவர் அல்ல என்ற காரணத்தால் என்று கூறப்படுகிறது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள 75 வயதான ஒரு கட்சியின் பதில் செயலாளராக இருப்பவர், ஏறக்குறைய கட்சியின் தலைவரைப் போல செயல்படுகிறவர், மதிக்கப்படும் ஒரு சட்டத்தரணி, அவருக்கு அவருடைய சொந்த சமூகத்தில் காணப்படும் மதிப்பின் குறியீடாகவும் அந்த சம்பவத்தை எடுத்துக் கொள்ளலாமா? இதை இன்னும் ஆழமாகக் கேட்டால்,தமிழ் அரசியலின் குறியீடாகவும் அதை எடுத்துக் கொள்ளலாமா? இருப்பதில் பெரிய கட்சி தன் கட்சிக்காரருக்கு எதிராகவே வழக்கு போடும் ஒரு நிலைமையில் இருக்கிறது. பெரும்பாலான ஆலய அறக்கட்டளைகளுக்குள் மோதல்கள். அந்த மோதல்கள் போலீஸ் நிலையம் வரை செல்கின்றன. அல்லது நீதிமன்றம் வரை செல்கின்றன.நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய திருச்சபைகளில் முக்கியமானது, தென்னிந்திய திருச்சபை.அதுவும் நீதிமன்றத்தில் நிற்கிறது. இதுதான் தற்போதைய ‘தமிழ்ச் சமூகத்தின் இருப்பு’

யாழ்ப்பாணம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதன் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இந்த வைபவத்தை முன்னிட்டு ஒரு நடைபவனி ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் தமிழரசு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனை விருந்தினராக அழைத்திருந்தார்கள். அதனை பழைய மாணவர்கள் எதிர்த்தார்கள்.பாடசாலை பழைய மாணவர் ஒருவரைத்தான் அவ்வாறு பிரதம விருந்தினராக அழைக்க வேண்டும் என்றும்,பழைய மாணவர் அல்லாத ஒருவரை அழைக்கக்கூடாது என்று பழைய மாணவர்கள் எதிர்ப்புக் காட்டியதை அடுத்து சுமந்திரன் அழைக்கப்படவில்லை.

சுமந்திரன் அங்கே அழைக்கப்படக் காரணம் பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் பிரதேச சபை தவிசாளர் என்றும் கூறப்படுகிறது. சுமந்திரனை அந்த வைபவத்துக்கு அழைத்தது அவர்தான் என்றும் கூறப்படுகிறது. கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவே முன்னிட்டு நடக்கும் நிகழ்வுகளின் இறுதி நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகரனும் நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்த ராஜாவும் முதலில் அழைக்கப்பட்டார்கள்.அரச பிரதிநிதிகளை அந்த கொண்டாட்டங்களுக்கு அழைக்கலாம் என்றால் அதனை சமப்படுத்துவதற்கு தமிழரசு கட்சியை சேர்ந்த சுமந்திரனையும் அழைக்க வேண்டும் என்று பழைய மாணவர்களில் சிலர் விரும்பியதாகக் கூறப்படுகிறது. எனினும் இதுபோன்ற நிகழ்வுகளில் பழைய மாணவர்களை அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டிய பழைய மாணவர்கள் சுமந்திரன் அந்த வைபவத்துக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்படுவதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். அதனால் சுமந்திரன் நடைபவனிகள் கலந்து கொள்ளவில்லை.இறுதி நாள் நிகழ்வில் அரச பிரதிநிதிகளும் அழைக்கப்படவில்லை என்று தெரிகிறது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி எனப்படுவது கடந்த நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ திருச்சபைகளுக்கும் இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டி,மோதல் என்பவற்றின் விளைவாகத் தோன்றிய பள்ளிக்கூடங்களில் ஒன்று.ஆறுமுக நாவலரின் இந்து மறுமலர்ச்சிச் செயற்பாடுகளின் விளைவாக,சுழிபுரம் ஆங்கில இந்து கல்லூரி என்ற பெயரில் அது முதலில் தொடங்கப்பட்டது.பின்னர் 1892 அரச உதவிகளைப் பெறும் ஆங்கில பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது.

கடந்த இரண்டு நூற்றாண்டு காலப்பகுதிக்குள் நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய காரணிகளில் முக்கியமானது, பாடசாலைகளைக் கட்டும் மதங்களுக்கு இடையிலான போட்டியாகும். திருச்சபைகளுக்கும் இந்து மறுமலர்ச்சியாளர்களுக்கும் இடையிலான ஒரு வித மோதல் அல்லது போட்டி காரணமாக கட்டியெழுப்பப்பட்ட பாடசாலைகளின் விளைவுதான் இப்போதுள்ள நவீன யாழ்ப்பாணம்.

ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் யாழ்.பரி.யோவான் கல்லூரி,யாழ் மத்திய கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,உடுவில்




# நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி அநுர தலைமையில் உயர்மட்டச் சந்திப்பு!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு 17ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்றது.

தற்போது சிறைச்சாலைக் கட்டமைப்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் மற்றும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.



மேலும், சிறைச்சாலை அதிகாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் நலன்புரி விடயங்கள் குறித்தும் இதன்போது ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார்.

ஜனாதிபதி ஒருவருடன் நேரடியாகத் தமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவெனச் சுட்டிக்காட்டிய சிறைச்சாலை அதிகாரிகள், அதற்காக ஜனாதிபதிக்குத் தமது நன்றியைத் தெரிவித்தனர்.



நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் அயேஷா ஜினசேன, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பிரசாத் ஹேமந்த குமார, சிறைச்சாலைகள் ஆணையாளர் (புனர்வாழ்வு) எஸ்.கே. பல்லெதென்ன, சிறைச்சாலைகள் ஆணையாளர் (செயற்பாடுகள் மற்றும் புலனாய்வு) ஏ.சி. கஜநாயக்க உள்ளிட்ட சிறைச்சாலைத் திணைக்கள அதிகாரிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடரும் படுகொலைகள்!

கே.பாலா

**1983– 2026 ஆம் ஆண்டு வரை இலங்கையில் 6 சிறைச்சாலைப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1983, 1997 , 2000 ஆகிய ஆண்டுகளில் நடந்த சிறைச்சாலைப் படுகொலைகள் முற்றிலும் இன ரீதியானவை. தமிழ் அரசியல் கைதிகளை இலக்கு வைத்தவை. இதில் 83 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் . 2012, 2020 ,சமீபத்திய 2026 ஆம் ஆண்டு சம்பவங்கள் சிறை நிர்வாகக் குறைபாடுகள், போதைப்பொருள் கும்பல் மோதல்கள் மற்றும் கைதிகளின் கிளர்ச்சிகள் காரணமாக ஏற்பட்டவை . இதில் 68பேர் படுகொலை செய்யப்பட்டனர்**

இலங்கையின் தலைநகர் கொழும்புக்கு அருகாமையிலுள்ள நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் அண்மையில் கைதிகளுக்கிடையில் வெடித்த மோதல் 22 கைதிகளினதும் 8 சிறைக்காவலர்களினதும் உயிர்களைக் குடித்தும் நூற்றுக்கும் மேற்பட்டோரை காயமடையவைத்துமுள்ள நிலையில் முழு நாடுமே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. அநுரகுமார அரசாங்கமும் இன்னொரு விமர்சனப் பொறியில்,நெருக்கடியில் சிக்கியுள்ளது.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 680. ஆனால், இச்சம்பவம் நடந்த நேரத்தில் அங்கு 2,417 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குறித்த சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகளுக்கும் விளக்கமறியல் கைதிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருந்ததுடன், இதில் கைதிகள் இருவர் உயிரிழந்திருந்தனர். இதன்போது காயமடைந்திருந்த 30க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலையில் மறுநாளான திங்கட்கிழமையும் மோதல் வெடித்த நிலையிலேயே இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

எந்தவொரு நாட்டின் சிறைச்சாலைகளும் குற்றவாளிகளைத்திருத்தி,நல்வழிப்படுத்துவதற்கான ஒரு மறுவாழ்வு மையமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், இலங்கையின் சிறைச்சாலைகளோ இன்று மரண பயமும், குருதி வாடையும் வீசும் கொலைச்சாலைகளாக உருவெடுத்துள்ளன."தண்டனை என்பது சுதந்திரத்தை பறிப்பது மாத்திரமே, உயிரை அல்ல" என்ற உன்னத விதி, இலங்கை சிறைச்சாலைகளின் இரும்புச் சுவர்களுக்குப் பின்னால் பல நேரங்களில் தூக்கிலிடப்படுகிறது. இலங்கையில் அரங்கேறும் சிறைச்சாலை மோதல்களும், சிறைச்சாலைப் படுகொலைகளும் வெறும் செய்திகளாகக் கடந்துபோகக் கூடியவை அல்ல.அவை நாட்டின் ஒட்டுமொத்த சட்ட ஒழுங்கு மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பின் மீதான பெரும் கேள்விக்குறிகளாகவேயுள்ளன.

ஒரு சமூகத்தின் நாகரிகத்தை அந்த நாட்டுச் சிறைச்சாலைகள் கைதிகளை நடத்தும் விதத்தை வைத்தே மதிப்பிட முடியும் என்றார் நெல்சன் மண்டேலா. அந்த வகையில், இலங்கையின் சிறைச்சாலைகளில் அடிக்கடி நிகழும் மோதல்களும், படுகொலைகளும் நமது சமூகக் கட்டமைப்பின் பலவீனத்தையே அம்பலப்படுத்துகின்றன. அதிகளவிலான கைதிகளினால் இட நெரிசல், போதிய வசதியின்மை மற்றும் கைதிகளுக்கு இடையிலான உட்பகைகள் எனப் பல காரணங்கள் கூறப்பட்டாலும், மனித உயிர்களின் இழப்பிற்கு அவை நியாயமாகிவிட முடியாது. சிறைச்சாலைகளுக்குள் நடக்கும் இந்தத் தொடர் வன்முறைகள் வெறும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை மட்டுமல்ல, அது ஒட்டுமொத்தப் பாதுகாப்பு அமைப்பிலும் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்களை வலியுறுத்தும் ஓர் ஆபத்தான எச்சரிக்கை மணி.

சந்தேக நபர்களாக, குற்றவாளிகளாக சிறைச்சாலைகளுக்கு சென்றவர்கள் பிணமாக மீட்கப்படுவதும், பாதுகாப்பிற்குப் பொறுப்பானவர்களின் கண் முன்னேஇவர்கள் கொடூரமாகக் கொல்லப்படுவதும் இலங்கையின் சிறைச்சாலைகள் வரலாற்றில் தொடர்கதையாகிவிட்டன. வெலிக்கடை முதல் மஹர வரை நாம் கண்ட வன்முறைகளும், படுகொலைகளும் அரச இனவாதம், மற்றும் பாதாளக்குழுக்களின் திட்டமிடப்பட்ட வன்முறைகள் படுகொலைகளாகவே இருக்கின்றன.இதனை இலங்கை சிறைச்சாலைகளில் இன்றுவரை நடைபெற்ற வன்முறைகள் , படுகொலைகள் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

### வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை


தலைநகர் கொழும்பில் 1983 ஜூலை 24 ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. இதில் 3000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் வெட்டியும் கொத்தியும் சுட்டும் தீயிட்டுக்கொளுத்தியும் அப்போதைய ஆடியளர்களான ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி ஜே .ஆர். ஜெயவர்த்தனாவின் அரசாங்கத்தின் ஆதரவுடன் படுகொலை செய்யப்பட்டனர் . இதன்போது 25 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை வெலிக்கடை அதியுயர் பாதுகாப்பு சிறையிலிருந்த சிங்களக் கைதிகள், சிறைக்காவலர்களின் துணையோடு தமிழ் அரசியல் கைதிகள் மீது திட்டமிட்ட கொடூர தாக்குதல்களை நடத்தி தமிழ் மக்களின் போராட்ட இயக்கங்களின் தலைவர்களாகவிருந்த குட்டிமணி, தங்கத்துரை உட்பட 53 தமிழர்களை கொடூரமாக கண்களைதோண்டியும் வெட்டியும் குத்தியும் அடித்தும் கொன்றனர் .இதில் படுகொலை செய்யப்பட்ட அனைவரும் தமிழ் அரசியல் கைதிகள்.

### களுத்துறை சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க ஆட்சியில் 12- 12- 1997 இல் களுத்துறை நகரில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியற் கைதிகள் அதே சிறைச்சாலையில் சிறை வைக்கப்படிருந்த சிங்களக் கைதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகள் இடம்பெற்ற வேளை இச்சிறைச்சாலையில் மொத்தம் 137 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இப்படுகொலை நடந்த வேளையில் சிறை அதிகாரிகள் ங்களக்கைதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அவர்களே தமிழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த வார்ட்னு சிறையின் கதவை சிங்களக்கைதிகளுக்கு திறந்து விட்டு உதவினர்.சிறை அதிகாரிகள் முன்பாகவே தமிழர்கள் மூவரும் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்களும் தமிழ் அரசியல் கைதிகள்.

### பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரணதுங்க ஆட்சியில் 25-10 - 2000 அன்று மத்திய மாகாணத்தில் பண்டாரவளையில் இருந்த பிந்துனுவெவ என்ற இடத்தில் இருந்த தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் சிங்களக் காடையர் கும்பலினால் வெட்டியும் குத்தியும் அடித்தும் எரித்தும் படு கொலைசெய்யப்பட்டனர். அன்று அதிகாலையில் தடுப்பு முகாமின் சுற்றுப் புறத்தில் இருந்த சிங்களக் கிராம காடையர்கள் நூற்றுக்கணக்கானோர் கத்திகள், வாள், பொல்லுகள் எடுத்துக்கொண்டு தடுப்பு முகாமிற்குள் நுழைந்து அங்கு உறக்கத்தில் ஆழ்ந்திருந்த தமிழ் இளைஞர்களை வெட்டிக் கொன்றனர். சிலர் உயிருடன் எரிக்கப்பட்டனர் .இக் கொடூர சம்பவத்திற்கு முதல் நாளே அம்முகாமில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தனர். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அத்துடன் படுகொலைகள் இடம்பெற்ற பொழுது பாதுகாப்பிற்கென நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் அதனைத் தடுப்பதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை.



தோடர்ச்சி 11 ம் பக்கம்.....

# இலங்கைச் சிறைச்சாலைகளில் தொடரும் படுகொலைகள்!

கே.பாலா

10 ம் பாக்கத் தோடர்ச்சி..

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் 09-11-2012வெலிக்கடை சிறைச்சாலைக்குள் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் சோதனையின் போது கைதிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும்இடையே ஏற்பட்ட மோதலில். கைதிகள் 27 பேர் கொல்லப்பட்டனர்..இதில் பெரும்பான்மையானோர் சிங்களக் கைதிகள்.

மகர சிறைச்சாலை படுகொலை

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஆட்சியில்29-11-2020 மற்றும் 30-11-2020 ஆகியதினங்களில் மகர சிறைச்சாலையில் கொரோனா தொற்று பரவலுக்கு மத்தியில், கைதிகள் தங்களுக்கு"ஊசு பரிசோதனை மற்றும் பாதுகாப்பு கோரி நடத்திய போராட்டம் வன்முறையாக வெடித்தது. இதில் சிறைக் காவலர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடு மற்றும் தீவைப்பால் 11 கைதிகள் பேர் கொல்லப்பட்டனர். அனைவரும் சிங்களக் கைதிகள்

நீர்கொழும்பு சிறைச்சாலை படுகொலை

இவ்வாறு தொடராக சிறைச்சாலைகளில் வன்முறைகள் , படுகொலைகள் இடம்பெற்று வந்த நிலையில்தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சியில் கடந்த 05-07-2026 மற்றும் 06-07-2026 ஆகிய இரு தினங்கள் சிறைச்சாலைக்குள் இரண்டு போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல், பின்னர் பெரும் சிறைக்கலவரமாகவெடித்ததில் துப்பாக்கிச் சூடு மற்றும் கத்தி, வாள் வெட்டுக்களினால் 8 சிறை அதிகாரிகளும் 22 கைதிகளும் என 30பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அதிகளவானோர் சிங்களக்கைதிகள், சிறை அதிகாரிகள்.

இதுவரை இலங்கைச் சிறைகளில் படுகொலைகளுக்குள்ளான
83 தமிழரும் 68 சிங்களவரும்

1983 ஆம் ஆண்டிலிருந்து 2026 ஆம் ஆண்டு வரை இலங்கையில் 6 சிறைச்சாலைப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. இதில் 1983, 1997 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் நடந்த சிறைச்சாலைப்படுகொலைகள் முற்றிலும் இன ரீதியானவை மற்றும் தமிழ் கைதிகளை இலக்கு வைத்தவை. இந்த இனரீதியிலான தாக்குதல்களில் 83 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் . 2012, 2020 மற்றும் சமீபத்திய 2026 சம்பவங்கள் சிறை நிர்வாகக் குறைபாடுகள், போதைப்பொருள் கும்பல் மோதல்கள் மற்றும் கைதிகளின் கிளர்ச்சிகள் காரணமாக ஏற்பட்டவை . இதில் 68 பேர் படுகொலை செய்யப்பட்டனர் . இவர்களில் 8 பேர் சிறை அதிகாரிகள். பலியானவர்களில் அதிகளவானோர் சிங்களவர்கள்.

இலங்கை வரலாற்றில் சிறைச்சாலைகளுக்குள் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிரான வன்முறைகள் படுகொலைகள் இடம்பெற்றபோது பொலிஸார், சிறைக்காவலர்கள் மற்றும் ஆயுதப்படையினர் உயிரிழந்த ,காயமடைந்த சம்பவங்கள் இல்லை. ஏனெனில் இவர்களின் ஆதரவுடனேயே தமிழ் அரசியல் கைதிகள் மீதான வன்முறைகள் , படுகொலைகள் இடம்பெற்றன. ஆனால் வெலிக்கடை, மகர ,நீர்கொழும்பு சிறைச்சாலைகளுக்குள் சிங்களக் கைதிகளுக்கிடையிலான வன்முறைகளின்போது அவற்றை கட்டுப்படுத்த முயன்ற 7 சிறை அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதுடன் 40 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

சிறைகளும் கைதிகளும்

இலங்கையில் சிறைச்சாலைகள், விளக்கமறியல் சிறைகள், திறந்தவெளி முகாம்கள் மற்றும் தற்காலிக தடுப்புக்காவல் நிலையங்கள் என மொத்தம் 60 சிறைச்சாலைகள் உள்ளன. இந்த சிறைச்சாலைகளில் 11,762 கைதிகளை வைத்திருக்கவே இடமுள்ள போதும், தற்போது இங்குள்ள சிறைச்சாலைகளிலுள்ள மொத்தக் கைதிகள் எண்ணிக்கை சுமார் 42,034 பேர்.இதில் விளக்கமறியல் கைதிகள் சுமார் 31,031 பேர் (இது மொத்த எண்ணிக்கையில் 73.8மூ ஆகும். அதாவது தண்டனை பெற்றவர்களை விட வழக்கின் தீர்ப்புக்காகக் காத்திருப்பவர்களே சிறைகளில் அதிகம்).தண்டனை பெற்ற கைதிகள் சுமார் 11,003 பேர் உள்ளனர் .இந்த சிறைச்சாலைகளில் ஆண் கைதிகள்: சுமார் 39,789 பேர் (94.7மூ)பெண் கைதிகள்: சுமார் 2,245 பேர் (5.3மூ) என்ற வகையில் உள்ளனர் .

இதேவேளை இலங்கையில் 1976ஆம் ஆண்டிற்குப் பிறகு மரணதண்டனை நடைமுறையில் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், நீதிமன்றங்களால் தொடர்ந்து மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. அவை பிற்காலத்தில் ஆயுள் தண்டனையாக மாற்றப்படுவது வழக்கம். இவ்வாறான நிலையில் இலங்கை சிறைச்சாலைகளில் மரணதண்டனைக் கைதிகளாக ஆண் கைதிகள் சுமார் 1,150 பேரும் பெண்கைதிகள் சுமார் 50 பேருமாக மொத்தம் 1,200 கைதிகள் மரணதண்டனைத் தீர்ப்புக்குள்ளாகி சிறையிலுள்ளனர்.இதேவேளை ஆயுள்தண்டனைக் கைதிகளாக ஆண் கைதிகள் சுமார் 500 பேரும் பெண் கைதிகள் : சுமார் 20 பேருமாக 520 வரையிலான கைதிகள் ஆயுள்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை சிறைச்சாலைகளின் கடந்த 43 ஆண்டுகால (1983-2026) வரலாறு என்பது, தண்டனை பெற்ற அல்லது விசாரணைக் கைதிகளாக அடைக்கப்பட்ட மனிதர்களின் கதைகளைத் தாண்டி, நாட்டின் கட்டமைப்புச் சிதைவின் ஒரு வடிவமாகவே திகழ்கிறது. 1983 வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள் போன்ற இன ரீதியிலான வன்முறைகள்,நாட்டின் இனமுரண்பாடுகள் எத்தகைய உச்சகட்டப் பகையைச் சிறைச் சுவர்களுக்குள்ளும் விதைத்திருந்தன என்பதை நிரூபித்தன. மறுபுறம், அண்மைக்கால பத்தாண்டுகளில் உருவெடுத்துள்ள போதைப்பொருள் கடத்தல் குழுக்களின் வன்முறைகளும், படுகொலைகளும் சிறைச்சாலைகள் குற்றவாளிகளைத் திருத்தும் இடங்கள் அல்ல.மாறாக, அவை பாதாள உலகக் குழுக்களின் கட்டுப்பாட்டு அறைகளாகவும் அதிகாரப் போட்டி நடக்கும் களங்களாகவும் மாறியுள்ள கசப்பான உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

சிறைகளுக்குள் நிகழும் இத்தகைய தொடர் வன்முறைகளும் படுகொலைகளும் வெறும் பாதுகாப்புக் குறைபாடுகள் மட்டுமல்ல. அவை நீதித்துறை, சிறைச்சாலை நிர்வாகம் மற்றும் அரசியல் பின்னணிகளுக்கு இடையே உள்ள ஆழமான முறைகேட்டுப் பிணைப்பின் வெளிப்பாடாகும். எனவே, வெறுமனே சுவர்களையும் பாதுகாப்புக் கெமராக்களையும் பலப்படுத்துவது மட்டும் இதற்கான தீர்வாக அமையாது. கைதிகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், இன ரீதியிலான வெறுப்புணர்வுகளைக் கடந்து சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதல், சிறை நிர்வாகத்தில் ஊழலை ஒழித்து போதைப்பொருள் மாபியாக்களின் பிடியிலிருந்து சிறைகளை மீட்பது போன்ற தீவிரமான சீர்திருத்தங்கள் இன்றியமையாதவை .



# வவுனியாவில் மாணவர்களை ஏற்றிச் செல்லும் பெற்றோர்களுக்குப் பொலிஸார் அவசர எச்சரிக்கை

## ஒரு வார கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது!

பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்லும் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளுக்குக் கட்டாயமாகத் தலைக்கவசம் (உடநஅநவ) அணிவிக்க வேண்டும் என வவுனியா பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்காகப் பெற்றோர்களுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க தலைமையில், வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக 15ம் திகதி புதன்கிழமை அன்று விசேட விழிப்புணர்வு நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



இதன்போது, தகுந்த தலைக்கவசம் இன்றித் தங்களது பிள்ளைகளைப் பாடசாலைக்கு மோட்டார் சைக்கிள்களில் ஏற்றி வந்த பெற்றோர்கள் மறிக்கப்பட்டு, அவர்களுக்கு ஆபத்துகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், சிறுவர்களுக்கான தலைக்கவசத்தின் அவசியம் குறித்த விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் பொலிஸாரால் விநியோகிக்கப்பட்டன.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி மலீத் ரணதுங்க,

இன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் மோட்டார் சைக்கிள்களில் அழைத்து வரப்படும் அனைத்துச் சிறுவர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் பிரத்யேகத் தலைக்கவசம் அணிவிக்கப்பட வேண்டும். இந்த ஒரு வார கால அவகாசம் நிறைவடைந்த பின்னர், விதியை மீறும் பெற்றோர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என எச்சரித்தார்.



இலங்கையில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் பதிவாகின்றன. இதில் தலைக்கவசம் அணியாமல் பயணிக்கும் சிறுவர்கள் பாரிய தலைக்காயங்களுக்கு உள்ளாகி, உயிரிழக்கும் அல்லது நிரந்தரப் பாதிப்புக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாகவே வவுனியா போக்குவரத்து பொலிஸார் இந்த விசேட அதிரடிப் பரிசோதனையையும் விழிப்புணர்வையும் ஆரம்பித்துள்ளனர்.

பாடசாலை ஆரம்பிக்கும் மற்றும் நிறைவடையும் நேரங்களில் இந்த விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரும் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின்படி, மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் ஓட்டுநர் மட்டுமன்றி, பின்னால் பயணிக்கும் நபரும் (அவர் சிறுவராக இருந்தாலும்) தரச்சான்றிதழ் பெற்ற தலைக்கவசத்தை (ளுடுளுஜ ஊநசவகைநைன உடநஅநவ) அணிவது கட்டாயமாகும்.அத்துடன் இலங்கையில் பதிவாகும் மொத்த வீதி விபத்துக்களில் 40மூ க்கும் அதிகமானவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களாகவே உள்ளன.

காலை வேளையில் பாடசாலைக்கு அவசரமாகப் பிள்ளைகளை அழைத்து வரும்போது, பெற்றோர்கள் கவனக் குறைவாக முந்திச் செல்ல முற்படுவதால் பாடசாலை வலயங்களுக்கு (ளுஉாழழட ணுழநௌ) அருகிலேயே அதிக விபத்துகள் ஏற்படுவதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.



# நீதித்துறை சீர்திருத்தம், சிறைச்சாலை வன்முறைகள் தொடர்பாக அநுர அரசுக்கு எதிராக ஐ.நா.விடம் முறையிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டணி?

## சிறையில் இருக்க வேண்டிய சுரேன் ராகவன் அங்கு எப்படி? என ஊடகவியலாளர்கள் கேள்வி

நீதித்துறை சீர்திருத்த முன்மொழிவுகள் மற்றும் அண்மையில் இடம்பெற்ற சிறைச்சாலை வன்முறைச் சம்பவம் தொடர்பில், ஜனநாயக மக்கள் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் குழுவினர் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு தலைமையகத்திற்குச் சென்று ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச்சைச் சந்தித்து மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்தச் சந்திப்பில் கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், தலதா அத்துகோரள, பிரேமநாத் சி. தொலவத்த, அசாத் சாலி மற்றும் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், அரசின் உத்தேச நீதித்துறை சீர்திருத்தங்கள் தொடர்பாகத் தனது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

"இலங்கையில் எவரும் இவ்வாறான மாற்றத்தைக் கோரவில்லை. சட்டத்தரணிகள், சிவில் சமூகத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். எந்தவொரு வெளிப்படைத்தன்மையுமின்றி அரசு முன்னெடுக்கும் இந்த முயற்சியின் பின்னணியில் உள்ள நோக்கம் என்ன?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், "அரசமைப்பின் 12(1) பிரிவின் கீழ் வரும் சமத்துவக் கோட்பாட்டுக்கு முரணாக, நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பதவிக்காலத்தை நீடிக்க அரசு முனைகின்றது. நாட்டில் உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்காது, வீணான குழப்பங்களை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமாக உள்ளது." - என்று அவர் குறிப்பிட்டார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்த ,தலதா அத்துகோர "சம்பவம் நடந்து 10 நாள்கள் கடந்தும், இதுவரை இடைக்கால அறிக்கை கூட வெளியிடப்படவில்லை. இது துரதிர்ஷ்டவசமானது. கண்ணீர்ப்புகை மற்றும் ரப்பர் தோட்டாக்கள் போன்ற குறைந்தபட்ச பலப்பிரயோக முறைகளைக் கையாண்டிருக்க வேண்டும். இந்த வன்முறையில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். தண்டனை வழங்கப்படாத நிலையில், இவர்களின் 'வாழும் உரிமை' பறிக்கப்பட்டுள்ளது. இது ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சட்டத்துக்குப் புறம்பானதாகும்." - என்று தெரிவித்தார்.

அரசின் நிர்வாகத் திறன் குறித்து விமர்சித்த அவர், "முறைமை மாற்றத்தை எதிர்பார்த்து மக்கள் வாக்களித்தனர். ஆனால் அனுபவமற்ற நிர்வாகமே தற்போதைய நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. ஜனநாயகக் கட்டமைப்புக்குள் நின்று, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசுக்கு 'இதுவே போதும்' என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்" - என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



# தமிழரின் நகைகளை கொள்ளையடித்த ராஜபக்ச 'திருடர்களிடமிருந்து' அவற்றை மீட்டுத் தாருங்கள் என அநுர அரசிடம் சிறீதரன் எம்.பி வலியுறுத்து.

இறுதி யுத்தத்தின் போது தமிழர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் 9ம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற பணத்தூய்மைப்படுத்தல் மற்றும் நிதிசார் சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தமிழீழ வைப்பகத்தில் தமிழ் மக்கள் அடகு வைத்திருந்த பல கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை, இறுதி யுத்தத்தின் போது ராஜபக்ஷ என்னும் கொள்ளையர்களின் அரசே கொள்கலன்களில் ஏற்றிச் சென்றதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார். தான் அந்த நகைகளை அரசிடம் ஒப்படைத்ததாகவும், அவற்றுக்கு என்ன நடந்தது என்றும் அவர் கேள்வியெழுப்பியும் உள்ளார்.

கொள்ளையடிக்கப்பட்ட அந்த நகைகள் மற்றும் சொத்துக்கள், தூயதாக்கல் நடவடிக்கைகளுக்காக உகண்டா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ராஜபக்ஷ குடும்பத்தினரால் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனது தொகுதியைச் சேர்ந்த 816 பேர், தமது நகைகளை மீட்டுத் தருமாறு என்னிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.



நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நகைகளை மக்களிடம் வழங்குவோம் என்று தேர்தல் வாக்குறுதி வழங்கிய அரசு, இப்போது அந்த நகைகளை அரசாங்க நிதிக்கு மாற்றப் போவதாகக் கூறுவது பாரிய ஏமாற்று வேலை."

- என்றார்.

சுரேஷ் சலே முதல் கோட்டாய ராஜபக்ஷ வரை பல்வேறு விசாரணைகளை முன்னெடுக்கும் அரசு, இந்த நகை கொள்ளை குறித்து ஏன் விசாரணை நடத்துவதில்லை? இது தமிழர்களின் சொத்து என்பதால் அலட்சியமாக இருக்கிறீர்களா?" என்றும் சிறீதரன் எம்.பி. ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார்.

"பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த நகைகளை மீள வழங்க அல்லது அவற்றின் பெறுமதியைக் கையளிக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாவட்ட அரச அதிபர்கள் ஊடாக நகைகளை இழந்தவர்களின் பட்டியலைத் திரட்டி, ராஜபக்ஷ அரசு எவ்வளவு சொத்துக்களைக் கொள்ளையடித்தது என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்." - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கொண்டுவரப்பட்ட நிதிகள் மற்றும் அரச வங்கிகளில் சட்டரீதியாக வைக்கப்பட்டிருந்த பணத்தையும் அரசுகள் பகற்கொள்ளையடித்துள்ளன என்று தெரிவித்த அவர், அந்த நிதியையும் மீள மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

# சுற்றுச்சூழல் பாதுகாப்பை காரணம் காட்டி மக்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகிறதா?

மன்னாரைச் சேர்ந்த கத்தோலிக்க பக்தர்கள் குழுவொன்று, புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்கள் பல தசாப்தங்களாக பயன்படுத்திவந்த வில்பத்து தேசியப் பூங்கா வழியாகச் செல்லும் பாரம்பரியப் பாதையை ஐந்து நாட்களுக்கு திறந்து விடுமாறு விடுத்த கோரிக்கைக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

ஜூலை மாதம் 6ஆம் திகதி முள்ளிக்குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் நடைபெற்ற ஒரு கவனயீர்ப்புப் போராட்டத்தில், முள்ளிக்குளம், பள்ளங்கண்டல் மற்றும் காயாக்குளி கிராமங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் பங்கேற்றிருந்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க பள்ளைக்கண்டல் புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஜூலை மாதம் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும் ஆண்டு திருவிழாவில் பங்கேற்கும் வகையில் வில்பத்து தேசிய பூங்கா ஊடான பாதையை மீண்டும் திறந்து விடுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்த போராட்டத்தை தொடர்ந்து தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மன்னார் மாவட்டச் செயலாளர் கே. கனகேஸ்வரனிடமும் அவர்கள் கையளித்தனர்.

நீதிமன்றத் தீர்ப்பை மேற்கோள்காட்டி, தாங்கள் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வந்த பாதை வழியாக இந்த ஆண்டு ஆலயத்திற்குச் செல்ல முடியாது என ஒரு வாரத்திற்கு முன்பாகவே வனவிலங்கு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அறிவித்ததாகவும், இதனால் பல நூறு கிலோமீட்டர் சுற்றுப்பாதை வழியாகப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பாரம்பரிய பாதை ஊடான போக்குவரத்து மறுக்கப்பட்டுள்ளதால் சுமார் 30 கிலோமீட்டர் பயணத்தை சுமார் 250 கிலோமீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக முள்ளிக்குளம் பங்கின் பொறுப்பாளர் அருட்தந்தை டெரன்ஸ் குலாஸ் தெரிவித்தார்.

எனினும் இன்று வரை (ஜூலை 11) கிறிஸ்தவ பக்தர்களின் கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்கவில்லை என பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறெனினும் ஒரு சில பக்தர்கள் அனுராதபுரம்-புத்தளம் ஊடாக சுமார் 250 கிலோமீற்றர் தூரம் பயணித்து ஆலயத்தை அடைந்ததாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



முள்ளிக்குளம் வழியாக பள்ளங்கண்டல் புனித அந்தோனியார் தேவாலயத்திற்குச் செல்லும் பாதையைப் பயன்படுத்துவதற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் தெளிவான தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது அந்தப் பாதை இயற்கையாகவே மீண்டும் வனப்பகுதியுடன் இணைந்து வருவதுடன், அது அதிக சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற உத்தியோகபூர்வக் கூட்டத்தில், இந்த ஆண்டு புனித அந்தோனியார் தேவாலயத் திருவிழாவை வழக்கமான பாரம்பரிய முறையிலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டதாக அந்தப் பகுதி கத்தோலிக்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பள்ளங்கண்டல் தேவாலயத்திற்குப் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் யாத்திரிகர்கள், 1983 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் மாத்திரமே பாரம்பரியப் பாதையைப் பயன்படுத்த முடியாமல் இருந்ததாக கத்தோலிக்க பக்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

வருடாந்தம் சுமார் 30,000 யாத்திரிகர்கள் இந்தத் திருவிழாவில் பங்கேற்க வருவதாகவும் அவர்கள் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டங்களை மீறி தேசியப் பூங்கா எல்லைக்குள் சுதந்திரமாகச் செல்வதாகவும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



# மன்னாரில் அதிரடியாக அரச நிறுவனங்கள் மீது பாய்ந்த டெங்கு ஒழிப்பு சட்டம்

## 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

மன்னார் மாவட்டத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு செயல் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டிய அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததன் அடிப்படையில், ஒரே நாளில் 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



"சட்டம் அனைவருக்கும் சமமானது" என்பதை நிரூபிக்கும் வகையில், தனியார் இடங்கள் மட்டுமன்றி, அரச நிறுவனங்கள் மீதும் எந்தவித பாரபட்சமும் இன்றி சுகாதார துறை மற்றும் முப்படை இணைந்து இந்த அதிரடி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் நகர சபை பிரிவில் டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,பொது சுகாதார பரிசோதகர்கள் ,முப்படையின் இணைந்து விசேட வேலைத்திட்டம் கடந்த 15-07-2026 அன்று புதன்கிழமை (15) காலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் அரச அலுவலகங்கள் , விடுதிகள்,வர்த்தக நிலையங்களில் டெங்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது டெங்கு நுளம்பு பெறுகுவதற்கு காரணமான இடங்கள் அடையாளம் காணப்பட்டது.இதன் போது டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருந்ததன் அடிப்படையில், 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



# "எங்களின் உயிரை உங்களின் கைகளில் ஒப்படைக்கின்றோம்"

## யாழ்– செம்மணியில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் காணாமல்போனோரின் உறவுகள் கண்ணீருடன் மகஜர்

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதனை ஏற்றுக்கொண்டு, உரிய சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளோம் என்று வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் 22ம் திகதி புதன்கிழமை செம்மணிமனிதப்புதைகுழிஅகழ்வுப்பணிகளைநேரில் பார்வையிட்டனர். இவர்களின் வருகையின்போது தூதுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளாக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி உள்ளிட்ட இருவரை அழைத்து ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினர் அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே யோகராசா கனகரஞ்சினி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவினரை செம்மணி மனிதப் புதைகுழி வாசலில் சந்தித்து, எங்களது உயிருக்கு மேலான கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்திருக்கின்றோம். அவர்கள் எங்களால் இயன்ற வரை உங்களுக்காக வேலை செய்வோம் என்று கூறியுள்ளனர்.



எங்களுக்கு எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரிய வேண்டும். இலங்கையில் இனப்படுகொலைதான் நடந்தது என்பதனைச் சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனூடாக சர்வதேச நீதி விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளகப் பொறிமுறைகளையோ, விசாரணைகளையோ அல்லது காணாமல்போனோர் அலுவலகம் போன்ற இலங்கை அரசால் அமைக்கப்படும் அலுவலகங்களையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இலங்கை அரசு எங்களுக்கு எப்போதுமே நீதியைத் தரப்போவதில்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்களையும் அரச பிரதிநிதிகளையும் சந்தித்தோம். எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே நாங்கள் சர்வதேச விசாரணையைக் கோருகின்றோம். சர்வதேசம் எங்களுக்குச் சரியான நீதியைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில்தான் மனுக்களைக் கையளிக்கின்றோம். எங்களோடு போராடியவர்களில் 450 பேருக்கு மேல் இதுவரையில் மரணித்துவிட்டனர். அவர்களுக்கும் எங்களுடைய உறவுகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும்.

கொடூர யுத்தமும் இன அழிப்பும் நடந்து பிற்பாடு கைளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சர்வதேசம் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும். கொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும். ஐ.நா. மன்றத்திலும் மனிதநேயத்தை நேசிக்கும் நாடுகளிலும் எமது பிரச்சினைகளை முன்வைத்து, சர்வதேச நீதிக்கான விசாரணையை மேற்கொள்ள உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளோம். இந்த அறிக்கை வெறும் ஆவணம் அல்ல, எமது உயிரையே உங்களது கைகளில் ஒப்படைத்துள்ளோம் என்றே அவர்களிடம் தெரிவித்தோம்." - என்றார்.

# இலங்கையிலேயே மிகச் சிறப்பாகச் செயற்படும் வட மாகாண சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள்! அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் பாராட்டு

இலங்கையிலேயே வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மிகவும் சிறப்பாகச் செயற்படுகின்றார்கள். ஏனைய மாகாணங்களில் நடைபெறும் கலந்துரையாடல்களின் போது, இவர்களது சேவையையே நாம் முன்னுதாரணமாகச் சுட்டிக்காட்டுகின்றோம்." - இவ்வாறு இலங்கை அரசின் சிறுவர் நன்னடததை மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள அதிகாரிகளுடனான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் களமட்டத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் அமைச்சருக்கு விரிவாக விளக்கமளித்தார். குறிப்பாக, சிறுவர் பராமரிப்புத் தொடர்பில் காணப்படும் சட்ட ஏற்பாடுகளின் போதாமைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையான சிறுவர்களுக்கென பிரத்தியேகப் புனர்வாழ்வு மையம் வடக்கு மாகாணத்தில் இல்லாமையால், அவர்களைச் சான்றுபெற்ற பாடசாலைகளில் இணைக்கும் போது பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், உளநலத் தேவைப்பாடுடைய சிறுவர்களைப் பராமரிப்பதற்கென அரச சிறுவர் இல்லங்கள் இன்மையால் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.



இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், கைவிடப்பட்ட சிறுவர்களை அரவணைத்து வளர்த்தெடுக்கும் இப்பணியானது வெறும் தொழில் அல்ல, அது ஒரு மாபெரும் சமூகச் சேவை என்ற உணர்வோடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சட்ட ரீதியான திருத்தங்கள் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில், 9 மாகாணங்களும் ஒன்றிணைந்து ஆவண ரீதியாக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகாலவரையில் வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் போதியளவு வழங்கப்படாமை குறித்துக் கவலை வெளியிட்ட அவர், இனிவரும் காலங்களில் இவர்களுக்கும் அத்தகைய பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான போதைப்பொருள் புனர்வாழ்வு மையம் மற்றும் உளநலத் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேறும் இளைஞர், யுவதிகளுக்கான வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் அமைச்சர் இதன்போது சில முக்கிய ஆலோசனைகளை வழங்கினார்.





இந்த நிகழ்வில், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாவல் திணைக்களத்தின் புள்ளிவிவரக் கையேடும், திணைக்களத்தின் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரால் முதன்முறையாகத் தமிழ்மொழியில் தயாரிக்கப்பட்ட 'நன்னடத்தை உத்தியோகத்தர்களுக்கான கையேடும்' அமைச்சர் உள்ளிட்ட அதிதிகளுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.





# குடமுருட்டிப் பாலத்தின் நிர்மானப் பணிகளைப் பார்வையிட்ட ரவிகரன் எம்.பி

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப்பாலத்தினை புதிதாக அமைக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தநிலையில், தற்போது குறித்த பாலத்தினை புதிதாக அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள குறித்த குடமுருட்டிப்பாலத்தின் நிர்மானப் பணிகளை நாடாளுன்ற உறுப்பினர் ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணி கூழாங்குளம் வீதியில் அமைந்துள்ள குடமுருட்டிப் பாலம் சீரின்றிய நிலையிலும், மிகவும் ஒடுங்கிய பாலமாகவும் காணப்பட்டதால் அப்பாலத்தினூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பலத்த போகுவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவந்தனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்களால் இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குறித்த குடமுருட்டிப் பாலத்தின் சீரமைப்புத் தொடர்பில் வவுனியாவடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தார்.

அதேவேளை 10.02.2026அன்று வவுனியா மாவட்டசெயலகத்தில் இடம்பெற்ற விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் குடமுருட்டிப்பாலத்தைச் சீரமைத்துத்தருமாறு கோரிக்கைவிடுத்திருந்தார்.

அதற்கமைய குறித்த பாலம் தொடர்பில் அமைச்சர் விமல் ரத்நாயக்க வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் விளக்கங்கோரியிருந்தார்.

அந்தவகையில் 19மீற்றர் நீளமான குறித்த குடமுருட்டிப் பாலத்தை அமைப்பதற்கு ஏறத்தாள 80மில்லியன்ரூபா அளவில் நிதி தேவைப்படுமென வவுனியா மாவட்ட வீதி அபாவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கே.கௌசிகன் பதில் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இவ்வாண்டிற்கான மாகாணக்குறித்தொதுக்கப்பட்ட நிதியில் குறித்த குடமுருட்டிப் பாலத்தினை அமைப்பதற்கு தம்மால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென வடமாகாண பிரதமசெயலாளர் திருமதி.தனுஜா முருகேசன் உறுதியளித்தார்.

இத்தகையசூழலில் குறித்த பாலத்தைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ள குடமுருட்டிப்பாலத்தின் நிர்மானப்பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்தோடு குறித்த பாலத்தின் நிர்மானப்பணி தொடர்பான விவரங்களை நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளரிடம் தொலைபேசியூடாக கேட்டறிந்துகொண்டார்.

அதற்கமைய இதன்போது வீதி அபிவிருத்தித் திணைக்களப்பொறியியலாளர் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் பதிலளிக்கையில்,

குறித்த குடமுருட்டிப் பாலமானது 49.4மில்லியன்ரூபாயில் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார். அத்தோடு குறித்த பாலமானது 28மீற்றர் நீளமாகவும், 8.5மீற்றர் அகலமாகவும் அமைக்கப்படவுள்ளதாகவும் இதன்போது பொறியியலாளரால் பதில் வழங்கப்பட்டதுடன், பாலத்துடன் இணைந்த 140மீற்றர் அணுகுசாலையும் அமைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த களவிஜயத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியாவடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான செ.சுசீலன், த.தனுசன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேசக்கிளையின் செயலாளர் அமலன் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினரோடு சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







# ஹரக் கட்டாவை விடுவிக்க மனைவியிடம் சொகுசு ஹோட்டலில் வைத்து இலஞ்சம்?

## 3 கொழும்புச் சட்டத்தரணிகளுக்கு எதிராக ஆணைக்குழுவில்

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரான 'ஹரக் கட்டா' என்பவரை விடுவிப்பதற்காக, அவரது மனைவியிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் மூன்று சட்டத்தரணிகளுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

'புரவெசியா' அமைப்பின் அழைப்பாளர் ரவீந்திர நிஷங்கவினால் 30ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் இந்த முறைப்பாடு கையளிக்கப்பட்டதுடன், அதனையடுத்து அவர் ஊடகங்களுக்கும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

திஸ்ஸ வேரகொட, புலஸ்தி ரூபசிங்க மற்றும் சஞ்சய ஆரியதாஸ ஆகிய மூன்று சட்டத்தரணிகளுக்கு எதிராக இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

டுபாய் பயணம் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ரவீந்திர நிஷங்க மேலும் தெரிவிக்கையில்,

"மேற்படி மூன்று சட்டத்தரணிகளும் கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி டுபாய் நாட்டுக்குச் சென்றுள்ளனர். அங்கு ஆகஸ்ட் 15 முதல் 18ஆம் திகதி வரை ஆடம்பர ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருந்து, ஹரக் கட்டாவின் மனைவியைச் சந்தித்து இந்தக் கொடுக்கல் - வாங்கல் தொடர்பாகப் பெருந்தொகை பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இவர்களின் டுபாய் பயணத்துக்கான விமான பயணச்சீட்டுக் கட்டணங்கள் மற்றும் அங்குள்ள ஆடம்பர ஹோட்டல்களில் தங்குவதற்கான கட்டணங்கள் அனைத்தையும் ஹரக் கட்டாவின் மனைவியே முழுமையாகச் செலுத்தியுள்ளார்.

எம்மால் முன்வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டை அந்த சட்டத்தரணிகளால் ஒருபோதும் மறுக்க முடியாது எனச் சவால் விடுக்கின்றேன். அவர்கள் டுபாய் சென்றமைக்கான விமானச்சீட்டுகள் மற்றும் தங்கியிருந்த ஹோட்டல் விவரங்கள் போன்ற உறுதியான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.

எனவே, அரசு முன்னெடுத்து வரும் இலஞ், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் விரைவுபடுத்த வேண்டுமாயின், இந்த விவகாரத்துடன் தொடர்புடைய திஸ்ஸ வேரகொட, புலஸ்தி ரூபசிங்க மற்றும் சஞ்சய ஆரியதாஸ ஆகிய மூன்று சட்டத்தரணிகளையும் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு உடனடியாகக் கைது செய்து முறையான விசாரணைகளை நடத்த வேண்டும்.

அவ்வாறு கைது செய்து விசாரிப்பதன் மூலமே, இந்தச் சந்திப்புகளில் என்ன பேசப்பட்டது, யாருக்காக இந்த இலஞ்சப் பணம் கேட்கப்பட்டது மற்றும் எவ்வளவு பணம் பெறப்பட்டது போன்ற அனைத்து உண்மைகளையும் நாட்டுக்கு வெளிப்படுத்த முடியும்."
- என்றார்.



# கனடாதினத்தன்றுமுதியோர்களுக்குஇலவசஉணவளித்தும் ஸ்காபுறோ பொது வைத்தியசாலைக்கு 5 இலட்சம் கனடிய டாலர்களையும் அன்பளிப்புச் செய்தும் மகிழ்ச்சியடைந்த வர்த்தக முன்னோடி கணேசன் சுகுமார்

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ‘சரவணபவன்’ சைவ உணவகத்தின் நூற்றுக்கணக்கான கிளைகள் உலகெங்கும் இயங்கிவருகின்றன.

அவற்றுள் நான்கு ‘சரவணபவன்’ கிளைகளை கனடாவில் நிர்வகித்து வருபவரும் வர்த்தகத்துறை முன்னோடியும் கனடா உதயன் பத்திரிகையின் அனைத்து செயற்பாடுகளையும் செவ்வனே ஆற்றுவதற்கு முன்வந்து ஆதரவு வழங்குபவருமான சகோதரர் கணேசன் சுகுமார் அவர்கள் தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் கனடாவிலும் பொது வைத்தியசாலைகள் மற்றும் ஆலயங்கள் -பொது அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு தாரளமாக நிதி அன்பளிப்புக்களை வருபவர் ஆவார்.

அந்த வரிசையில் நேற்று 01-07-2026 அன்று கனடா தினத்தன்று சரவணபவன் ஸ்காபுறோ கிளையில் ஆயிரக்கணக்கான முதியவர்களான பெரியோர்களுக்கு இலவசமாக மசாலா தோசையும் தேநீர் மற்றும் குளிர்பானங்களையும் வழங்கினார். இதற்காக வாகனத் தரிப்பிடத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பெற்றும் அழைக்கப்பட்டவர்கள் வசதியாக இருந்து உணவருந்திச் செல்ல வாய்ப்புக்களை வழங்கினார்.



அத்துடன் அன்றைய தினம் கனடாவின் மத்திய அரசு பாராளுமன்ற உறுப்பினர்கள்-மாகாண அரசு பாராளுமன்ற உறுப்பினர்கள்-அமைச்சர்கள் மற்றும் நகரசபைகளின் கவுன்சிலர்கள் என பலரும் சங்கமித்த நிகழ்வில் ஸ்காபுறோ பொது வைத்தியசாலை நிதிக்காக 5 இலட்சம் கனடிய டாலர்களை அன்பளிப்புச் செய்தார். வைத்தியசாலையின் சார்பில் அதன் பிரதிநிதி ஒருவரிடம் கணேசன் சுகுமார் மற்றும் பிரமுகர்கள் ஒன்றிணைந்து அந்த’மாதிரிக் காசோலை’யை வழங்கினார்கள்.. இங்கே காணப்படும் படத்தில் கனடா தினத்தையொட்டி சிவப்பு நிறை ‘ஷேர்ட்’ அணிந்து கணேசன் சுகுமார் அவர்கள் நண்பர்கள் மற்றும விருந்தினர்கள் ஆகியோருடன் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்.












# இலங்கையில் மாகாண ஆளுநர்களின் தொடர் பதவி துறப்பு இடம்பெறுகையில் பிரதமரும் பதவியைத் துறப்பாரா? என கேள்வி எழுப்பும் சீலரத்ன தேரர்

மாகாண ஆளுநர்கள் தொடர்ச்சியாக இராஜிநாமா செய்து வரும் சூழலில், தற்போதைய பிரதமரும் தனது பதவியை இராஜிநாமா செய்வாரோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது என்று ஜனசெத பெரமுன கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்தியமாகாண ஆளுநர் தனது பதவியை இராஜினாமா செய்தமைக்கு சில தரப்பினரின் அழுத்தங்களே காரணம் எனச் சந்தேகிப்பதாகத் தெரிவித்த அவர், அரசில் உள்ளவர்கள் அனைவரும் பதவிகளிலிருந்து விலகி, நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், அடுத்தடுத்து நியமிக்கப்படும் ஆளுநர்கள் எத்தனை நாள்கள் பதவியில் நீடிப்பார்கள் என்பது கேள்விக்குறியே என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் அண்மைய கருத்துகள் குறித்தும் சீலரத்ன தேரர் விமர்சித்தார். “தங்களுக்கு இன்னும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்று கிராமங்களுக்குச் சென்று கூறிவருவது அரசின் மீதான நம்பிக்கையைச் சிதைக்கின்றது. அரசுக்கு முழு அதிகாரமும் இருக்கும்போது, அதிகாரமில்லை என்று கூறுவது பொய்யானதாகும். இளமைக் காலத்தில் போராட்டம் நடத்தியவர்களுக்குச் சிறிதளவேனும் அறிவு இருக்க வேண்டும். போதைப்பொருள்களை உட்கொண்டுவிட்டு மேடைகளில் பேசுகின்றார்களா என்று கேட்கத் தோன்றுகின்றது. இவர்களின் இத்தகைய பேச்சுகள் ஜனாதிபதியின் கௌரவத்துக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்துகின்றன” என்று அவர் சாடினார்.

இந்தச் சூழலில், மாகாண ஆளுநர்களைப் போல கலாநிதியாக இருக்கும் தற்போதைய பிரதமரும் தனது பதவியை விரைவில் இராஜிநாமா செய்வாரோ என்ற பலத்த சந்தேகம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கனடா–ஒன்ராறியோவில் ‘சிகப்புச் சூரியன்’

அன்று புதன் கிழமை, யூலை மாதம் 15 ஆம் திகதி 2026. காலை எழுந்து யன்னலுக்கால் வெளியே பார்த்தேன். வழமை போலக் கேட்கும் குருவிகளின் சத்தம் கேட்கவில்லை. மௌனத் திரை விரிக்கப்பட்டிருந்தது. என்னவாக இருக்கும்? வெளியே மப்பும் மந்தாரமாய் இருப்பது போலத் தெரிந்தது. வானத்தைப் பார்த்தேன், கருமேகங்களைக் காணவில்லை, மழை வரும் அறிகுறியுமில்லை. அதற்குப் பதிலாக மங்கலான மஞ்சள் நிறத்தில் வானம் இருண்டு கிடந்தது. அதன் நடுவே என்றும் இல்லாதவாறு வானத்தில் சூரியன் சிகப்பு வட்டத் தட்டுப் போலத் தகதகவென்று சிறிது நேரம் காட்சி தந்தது. ஒரு கணம் சந்திரனோ என்று எண்ணத் தோன்றியது. இல்லை கிழக்குவானில் சூரியன்தான்! சூரியனை நேரடியாகப் பார்க்க முடிந்தது. அந்த வானத்து மௌனம் ஏதோ ஒருவகை இனம்புரியாத பயம் காட்டியது. இது போன்றதொரு சூழ்நிலையை ஏற்கனவே அலஸ்காவிலும், ஐஸ்லாந்திலும் பார்த்திருக்கின்றேன்.

கனடாவுக்கு என்ன நடந்தது, பூமியில் மாற்றமில்லை, சூரியனிலும் மாற்றமில்லை, ஆனால் இடை நடுவேதான், வானத்தில் அந்த மாற்றம் நடந்தது. இணையத்தில் சென்று தேடினேன், காரணம் புரிந்தது. இதற்கெல்லாம் காரணம் கடனாவின் சில பகுதிகளில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீ என்பதை அறிய முடிந்தது. சுமார் 800 இடங்களில் காட்டுத் தீ பரவியிருந்தது. கனடாவின் தென் பகுதி மட்டுமல்ல, காற்று வீசும் திசையில் இருந்த அமெரிக்காவும் இதனால் பாதிக்கப்பட்டது. மேற்கு மற்றும் வடக்கு ஒன்டாரியோ மற்றும் வடக்கு மினசோட்டா முழுவதும் பரவி வரும் ஒரு பெரிய காட்டுத்தீயே இதற்கு மூல காரணமாகும். இதனால் இப்பகுதிகளில் காற்றின் தரம் ‘ஆரோக்கியமற்ற’ நிலைக்கு வீழ்ச்சி அடைந்திருந்தது.



இது போன்ற நிகழ்வு 2023 ஆம் ஆண்டும் நடந்திருந்தது. ஆனால் இதைவிட அது மோசமாக இருந்தது. இதன் காரணமாக அரசு ‘மஞ்சள் அறிவிப்பு’ விட்டிருந்தது. காரணம், ரொரன்ரோ, உலகின் மிக மோசமான காற்றுத் தரங்களில் சிலவற்றைப் பதிவு செய்திருந்தது. அதன் குறியீட்டு அளவு 220 க்கு அருகில் இருந்தது, இது ‘மிகவும் ஆரோக்கியமற்ற’ நிலையாக இருந்தது. இதைவிட பாஸ்டன், மாசசூசெட், நியூயோர்க்கின் பெரும்பாலான பகுதிகள், ‘ஆரோக்கியமற்றது’ என்ற வரையிலான வரம்பில் இருந்தன. அதனால் மாநிலம் தழுவிய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதாவது தேவையில்லாமல் வெளியே நேரத்தைச் செலவிட வேண்டாம், வெளியே நடக்கும் பொது நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்யும்படியும் கேட்டிருந்தது. பாடசாலை மாணவர்களுக்கும் அந்தக் கட்டுப்பாடு இருந்தது. காட்டுத் தீ ஏற்பட்ட இடங்களில் உள்ள மக்களை வெளியேற்றுவதில் மாகாண அரசுகள் செயற்பட்டன. குடியிருப்புகள் எரிந்தாலும், மக்கள் காப்பாற்றப்பட்டனர். ஆனால் மிருகங்கள் பறவைகள் மற்றும் உயிரினங்கள் தப்ப வழியில்லாமல் நடுவே அகப்பட்டுக் கொண்டன. இயற்கையின் அழிவைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுத்தாலும், இப்படியான நிகழ்வுகள் வருடா வருடம் அதிவெப்பம் காரணமாக நடக்கத்தான் செய்கின்றன.

வானம் ஏன் என்றும் இல்லாதவாறு மஞ்சள் நிறமாக மாறியது என்பதற்கு அடிப்படை இயற்பியல் காரணம் இருந்தது. பொதுவாகக் காற்றில் உள்ள புகைத் துகள்கள் சூரிய ஒளியைச் சிதறடிப்பதுண்டு. ஆனால் அவை எல்லா நிறங்களையும் சமமாகச் சிதறடிப்பதில்லை. சூரிய ஒளி வெள்ளையாகத் தெரிந்தாலும், அது எல்லா நிறங்களின் கலவையாகும். குறிப்பாக நீலம் மற்றும் ஊதா போன்ற குறுகிய அலைநீளங்களைக் கொண்ட ஒளியை அவை மிகவும் திறம்படச் சிதறடிக்கின்றன, அதே சமயம் சிவப்பு, ஒரேஞ்சு மற்றும் மஞ்சள் போன்ற நீண்ட அலைநீளங்கள் மிகவும் எளிதாக ஊடுருவிச் செல்கின்றன.

பொதுவாக வானத்தைப் பார்த்தால் சாதாரணமாக, வானம் என்பது சிதறடிக்கப்பட்ட நீலநிற ஒளி மேலே அங்குமிங்கும் பட்டுத் தெறிப்பதாகவே இருக்கும். அதனால் வானம் நீலமாகவே கண்ணுக்குத் தெரியும். ஆனால், காட்டுத்தீயின் புகை வளிமண்டலத்தில் சேரும்போது, அந்த நீலத்தின் பெரும்பகுதி வடிகட்டப்பட்டு, அதற்குப் பதிலாக நிறமாலையின் வெப்பமான பகுதியால் ஆதிக்கம் செலுத்தப் படுகின்றது. அதனால்தான் கடுமையான புகை சூழ்ந்த நாட்களில், பகல் நேரங்களில் மங்கலான, மஞ்சள் நிற வானமும், மாலை நேரங்களில் வழக்கத்திற்கு மாறாகத் தீப்பிழம்புகள் போலத் தோற்றமளிக்கும் பிரகாசமான சூரிய அஸ்தமனங்களும் காணப்படுகின்றன. எனவே, சிகப்பு சூரியன் என்பது சூரியன் மாறுவதல்ல. சூரியனின் ஒளி உள்ளே வரும் வழியில் காற்று அதன் செயல்பாட்டை மாற்றுவதாகும்.

அதிகப் புகை உள்ள சூழலில் நீண்ட நேரம் வெளியில் இருக்க நேர்ந்தால், இருமல், தொண்டை எரிச்சல், கண் அரிப்பு அல்லது மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளைக் கவனிக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டது. உங்களுக்கு ஆஸ்துமா, இதய நோய் இருந்தாலோ, அல்லது நீங்கள் கர்ப்பிணியாகவோ, முதியவராகவோ இருந்தாலோ, இப்படியான அறிகுறிகளைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இப்படியானவர்கள் தான் அதிக புகை வெளிப்பாட்டால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பார்கள்.



# கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் விஜய் அவர்களை சந்தித்தனர்

### ஜனநாயகத் தமிழர் கட்சியின் தலைவர் சட்டத்தரணி கே. வி. தவராசாவும் இந்தக் குழுவில் இணைந்திருந்தார்

தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான ஏழு பேர் கொண்ட தூதுக்குழுவினர், தமிழ்நாட்டு முதலமைச்சர் சந்திரசேகர் ஜோசப் விஜய் அவர்களைச் சந்தித்து ஈழத் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்தில் 03-07-2026 அன்று வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன், ஈழத் தமிழர்களின் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய எழுத்துமூல ஆவணமொன்றும் முதல்வரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக சென்னையில் தமிழ்த் தேசியப் பேரவை அன்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.






அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசமான ஈழத்தமிழ்த் தேச மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் கூட்டமைப்பாக விளங்கும் தமிழ்த் தேசியப் பேரவையினராகிய நாம், 3ம்திகதி வெள்ளிக்கிழமை அன்று சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் சந்திரசேகர் ஜோசப் விஜய்யைச் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

இச்சந்திப்பில், ஈழத்தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அரசியல் மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள், ஒற்றையாட்சி அரசமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி (கூட்டாட்சி) அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம் மற்றும் ஈழத்தமிழர் இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இந்திய மற்றும் ஈழத் தமிழ்க் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

ஈழத்தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளருமான செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், ஜனநாயகத் தமிழர் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே. வி. தவராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், அக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் மற்றும் கொள்கைப் பரப்புச் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான நடராஜர் காண்டீபன் ஆகிய ஏழு பேர் கொண்ட குழுவினர் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.” - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# கனடாவின் 159வது பிறந்த தினக் கொண்டாட்டத்தில் விசேட அழைப்பின்பேரில் கலந்து கொண்ட ‘வீரகேசரி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கஜன் அவர்கள்

கனடாவின் 159வது பிறந்த தினக் கொண்டாடும் வகையில் இவ்வருடத்திற்கான ‘கனடா தினம்’ கொழும்பிலுள்ள இலங்கைக்கான கனடிய தூதுவராலயத்தால் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. மேற்படி வைபவத்தில் வெளிநாட்டுத்தூதுவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் இலங்கை அரசின் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பெற்றிருந்தனர்.

மேற்படி கொண்டாட்டத்திற்கு விசேட அழைப்பின்பேரில் கலந்து கொண்ட ‘வீரகேசரி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் □□ரீகஜன் அவர்கள் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் (ஐளயடிநடடந ஆயசவைi) அவர்களோடு உரையாடுகையில் கனடிய தேசத்திற்கான தனது வாழ்த்துக்களையும் தெரிவித்து தனது அண்மைய கனடிய விஜயம் தொடர்பான இனிய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.



For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM

MATT MATHISAYAN
Sales Representative
Beyond Expectations

647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

20th HOMELIFE
Future Realty Inc., Brokerage
Independent Owned & Operated

Issue - 29 Once a Month JULY 2026



## நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி அநுர தலைமையில் உயர்மட்டச் சந்திப்பு!

## சிங்களத்தின் வெறியாட்டமும் தமிழினத்தின் ஆறாத வடுக்களும்!







## கனடா-கல்முனை பிராந்திய இணையத்தின் கோடை கால ஒன்றுகூடல் , சமூக உறவை வலுப்படுத்தும் நிகழ்வாக இடம்பெற்றது

## கனடாவின் 159வது பிறந்த தினக் கொண்டாட்டத்தில் விசேட அழைப்பின்பேரில் கலந்து கொண்ட் வீரகேசரி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கஜன் அவர்கள்

